# மன்னா

"மீட்க இயலாதவாறு ஆண்டவரின் கை குறுகிவிடவில்லை. கேட்க முடியாதவாறு ஆண்டவரின் காது மந்தமாகி விடவில்லை."
(எசாயா 59:1)

விலை ரூபா 10.00

மன்னார் மறை மாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

பொழிவு 14 | புரட்டாதி, 2001 | (தனிச் சுற்றுக்கு மட்டும்) | குவிப்பு 75

மன்னார் மறைவட்ட வெளியீடு / PUBLISHED BY THE DIOCESE OF MANNAR


# உலகத்திலே அதிகளவு கல்வியறிவு கொண்ட அகதிகள் இந்தியாவில் உள்ள ஈழத்து அகதி மக்களே!

### இயேசு சபை அகதி பணி இந்தியப் பொறுப்பாளர் வின்னி யோசப் அடிகளார்

## மன்னாவுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் பெருமிதம்



"இந்தியாவில் உள்ள ஈழத்தமிழர் அகதி முகாம்களில் ஏறக்குறைய 25000 ற்கும் அதிகமான மாணவர்கள் உள்ளனர். இங்குள்ள மக்களில் 85 வீதமானவர்கள் கல்வியறிவு படைத்தவர்கள். உலகத்திலே அதிகளவு கல்வியறிவுகொண்ட அகதி மக்கள் ஈழத்தமிழ் அகதிகளே! இன்று நமது மாணவர்களில் 650 க்கும் அதிகமானவர்கள் கல்லூரிகளுக்குச் செல்கின்றார்கள். இவர்களில் சிலர் மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, கணினிப் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் கல்வி கற்கின்றனர். இந்த ஆண்டு மட்டும் நமது முகாம்களில் உள்ள 10 மாணவர்கள் மருத்துவக் கல்லூரிக்குச் சென்று இருக்கின்றார்கள். எனவே இவர்கள் இலங்கைக்கு திரும்பி வரும்போது புத்தி ஜீவிகளாக, மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக வருவார்கள்" என அண்மையில் மன்னாருக்கு வருகை தந்த இயேசு சபை அகதிப் பணி இந்தியப் பொறுப்பாளர் வின்னி யோசப் அடிகளார் மன்னாவுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் குறிப்பிட்டார். (பேட்டியின் முழு வடிவத்தை பக்கம் 3ல் காணலாம்)

## செடக் நிறுவன தேசிய இயக்குனர் பணியில் இருந்து தேவறாஜா அடிகளார் விடை பெறுகிறார்



கடந்த 6 ஆண்டுகளாக செடக் நிறுவனத்தின் தேசிய இயக்குனராக அயராது பணியாற்றிய அருட் ப[illegible]ளர் ஜே. பி. தேவறாஜா அடிகளார் அப்பணியிலிருந்து விடை பெறுகிறார். மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூத்த குருக்களில் ஒருவரான அடிகளார் இலங்கை ஆயர் மன்றத்தின் நிர்வாகத்திற்குள் இருக்கும் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனமாகிய செடக் (SEDEC) நிறுவனத்தினுடைய இப்பாரிய பொறுப்பை இவ் யுத்த சூழ்நிலையில் சுமுகமாக கொண்டு இயக்கியமை பாராட்டப்பட வேண்டியதே. (தொடர்ச்சி 2ம் பக்கம்)

## கிறிஸ்தவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த முதல் தடவையாக இலங்கையில் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சு

கிறிஸ்தவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த முதல் தடவையாக இலங்கையில் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய அமைச்சின் அமைச்சராக திரு. ஜெயராஜ் பெனாண்டோபுள்ளே அவர்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஆவணி 2ந் திகதி பொறுப்பேற்றார். இந்த அமைச்சு பற்றி இலங்கை ஆயர் பேரவை தலைவர் மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் "இஸ்லாமிய மற்றும் இந்து மக்களுக்காக தனித்தனியான சமய அலுவல்கள் அமைச்சு இருக்கின்ற வேளையில் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சு ஒன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற தேவையை உணர்ந்து அதற்கான கோரிக்கையை இலங்கை ஆயர் பேரவை முன்வைத்தது. திருச்சபை தனது நியாயமான உரிமைகளை பெற்றுக்கொள்வதில் அடிக்கடி பிரச்சனைகளை சந்தித்து வந்துள்ளது. இப்பிரச்சினைகளை தீர்க்க இவ் அமைச்சு உதவியாக அமையும்" என்று தெரிவித்தார். அண்மையில் அமைச்சர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டபோது அமைச்சர் ஜெயராஜ் பெணான்டோபுள்ளே தனது பதவியை இராஜினாமா செய்தது நாம் அறிந்ததே.

## கார்மேல் சபை கன்னியர்களின் புதிய மாகாணத் தலைவி



அருட்சகோதரி எம். சுனித்தா அ. கா. அவர்கள் இலங்கை அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் புதிய மாகாணத் தலைவியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அருட்சகோதரிகள் சிந்தியா, மரிய லூர்ட்ஸ், நெலி கெலன், எம். பிறைஸ், அடலின்னா (நிதியாளர்) ஆகியோர் புதிய மாகாணத்தலைவியின் ஆலோசகர்களாக செயற்படுவார்கள். விடைபெற்று செல்லும் மாகாணத்தலைவி அருட்சகோதரி மரிய டிலக்ரா அவர்கள் கடந்த 6 வருடங்களாக இலங்கை கார்மேல் சபை கன்னியர்களின் மாகாணத்தலைவியாக அரும்பணி புரிந்துள்ளார்.

## தாழ்வுபாட்டுப்பங்கில் திருச்சிலுவைக் கன்னியர்கள்

தாழ்வுபாட்டில் ஒரு கன்னியர் இல்லம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக முன்வைக்கப்பட்டு வந்தது. அதிகரித்து வரும் மேய்ப்புப்பணி தேவையைக் கருத்தில் கொண்டு இப்போது இங்கு திருச்சிலுவை கன்னியர் இல்லம் ஒன்று அமைக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கான முன்முயற்சியாக கடந்த 3 மாதங்களாக 2 திருச்சிலுவைக் கன்னியர்கள் அருட்சகோதரி மரியற்றா அருட்சகோதரி கொன்சன்ரைன் ஆகியோர் இங்கு தங்கியிருந்து கல்விப்பணியும் பங்குப்பணியும் செய்து வருகின்றனர். தாழ்வுபாட்டுப் பங்குக்கென ஓர் கன்னியர் இல்லம் அமைவதையிட்டு இங்குள்ள மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## அளவக்கை மற்றும் கீளியன் குடியிருப்பு பங்குகளுக்கு புதிய பங்குமனைகள்

புதிதாக உருவாக்கப்பட்ட பங்குகளில் அடி[illegible] வசதிகள் கொண்ட பங்குமனைகள் இல்லாத குறை ஆழமாக உணரப்பட்டது. பங்குமனைகளின் அவசரத் தேவையை உணர்ந்த மன்னார் ஆயர் [illegible] இப்பங்குகளுக்கான பங்குமனையை [illegible]மைக்க கடுமையான முயற்சியை மேற்[illegible]. இதற்கமைய அளவக்கை, கீளியன் குடியிருப்பு பங்குகளுக்கான புதிய பங்குமனைகள் கட்டி முடிக்கப்பட்டு ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

அளவக்கை பங்கின் புதிய பங்குமனை திறப்பு விழா கடந்த 01. 09. 2001 அன்று இடம்பெற்றது. கீளியன் குடியிருப்பு பங்குமனை கடந்த 09. 09. 2001 அன்று திறந்து வைக்கப்பட்டது. இப்பங்கு மனைகளை அமைக்க பங்கு மக்களின் அயராத உழைப்பு நிறைவாகக் கிடைத்தது பாராட்டபடவேண்டிய விடயமாகும். ஏற்கெனவே இலுப்பைக்குளம், தோட்டவெளி ஆகிய பங்குகளின் புதிய பங்குமனைகள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன. இன்னும் நானாட்டான், கற்கடந்த குளம் ஆகிய பங்குகளுக்கான பங்குமனைக் கட்டிட வேலைகள் நிறைவுறும் தறுவாயில் உள்ளன.

## அருட் சகோதரி எம்மா தி.கு இறைவனடி சேர்ந்தார்



வங்கம் தங்கும் வங்காலைப் பதியை சேர்ந்த அருட்சகோதரி எம்மா தனது 75வது வயதில் 24.08.2001 ல் இறைவனுடன் சங்கமமாகினார். சென்ற வருடம் தனது துறவு வாழ்வின் பொன் விழாவைக் கண்டுகளித்த இவர் மானிப்பாயில் பணிபுரிந்து கொண்டிருந்தவேளை தனது விடுமுறையைக் கழிப்பதற்காக ஆடித்திங்கள் 2ம் நாள் மன்னார் மண்ணுக்கு வருகை தந்தார். இவர் இவ்விடுமுறைக்கு வந்ததன் முக்கிய நோக்கங்கள் மூன்று. அவை: அருட்தந்தை குலாஸ் அடிகளாரின் குருத்துவ பொன்விழாவில் கலந்து கொள்ளல், தலைமன்னார் கன்னியர் இல்ல வெள்ளிவிழாவில் கலந்து கொள்ளல், தனது பொன்விழாவின் பொருட்டுத் தனது பிறந்த மண்ணான வங்காலையில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்தல் என்பனவாகும். ஆனால் இறைவனின் திட்டமோ வேறாக இருந்தது. திடீரென ஏற்பட்ட சுகயீனத்தின் காரணமாக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 24.08.2001 ல் இறைவன் சந்நிதி அடைந்தார் (தொடர்ச்சி 9ம் பக்கம்)

"உம் வாக்குகளை மறக்க மாட்டேன்" தி. பா. 119 : 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனப் பொழிவு

பதிப்பசிரியர் பகர்வது

வணக்கம்

# நாமும் நமது வழிபாடுகளும்

"நெஞ்சிற்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி" என்கிறோம். "இறைவன் வாழும் இல்லம் என்பது ஆலயமாம். இங்கு இறைமக்கள் யாவரும் இணைந்து வருவது ஆனந்தமாம்" என்று மகிழ்வோடு பாடுகின்றோம்.

நெஞ்சிற்கு நிம்மதி தரும் ஆண்டவன் சந்நிதியில் - இறைவன் வாழும் இந்த இல்லத்தில் நாம் எப்படி நடந்து கொள்கிறோம்? - நமது மனநிலைகள் எப்படியாக உள்ளது? என்பதைப் பற்றியெல்லாம் ஆற அமர சிந்தித்துப் பார்ப்பது - சுய மதிப்பீடு செய்வது நமது வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

நமது இறைமக்களில் குறிப்பிட்ட வீதத்தினர் ஆலயப் பக்கமே தலைகாட்டுவதில்லை. அவர்கள் வருடத்தில் முக்கிய சில தினங்களில் - பெரிய வெள்ளி, உயிர்த்த ஞாயிறு மற்றும் கிறிஸ்மஸ் போன்ற தினங்களில் மட்டும் ஆலயத்திற்கு வந்து தரிசனம் கொடுப்பார்கள். இந்த பெரிய வெள்ளிக் கிறிஸ்தவர்கள் உயிர்த்த ஞாயிறுக் கிறிஸ்தவர்கள் போன்ற குறிப்பிட்ட வீதத்தினர் ஒரு புறம் இருக்க இறைவனை வழிபடுவதற்காக வழக்கமாக ஆலயத்திற்கு வருகின்ற நம்மவர் சிலரின் மனநிலைகளையும் நடவடிக்கைகளையும் பார்க்கும்போது தலையைப் பிய்த்துக் கொண்டு அழவேண்டும் போல் உள்ளது.

### ஒய்யாரமாக அமர்ந்து....!

நம்மவர்களில் சிலர் ஆலயத்திற்கு வரும்போது ஏதோ நாடகம் பார்க்க வந்தவர்கள் போல் வந்து சக்கப் பணிய கிடந்து விடுவார்கள். இருக்கை வசதி உள்ள ஆலயங்களாக இருந்தால் நேரத்திற்கு ஆசனங்களைப் பிடித்து ஒய்யாரமாக அமர்ந்து கொள்வார்கள். (வயோதிபர்கள் வருத்தக்காறரைப் பற்றி இங்கு குறிப்பிடவில்லை.) வழிபாட்டின்போது தேவையான சந்தர்ப்பங்களில் எழுந்திருக்கவே மாட்டார்கள். ஒரு சிலர் வந்து வாசலில் கிடந்து விடுவார்கள். மற்றவர்கள் உள்ளே போக முடியாமல் திண்டாடுவார்கள் மற்றவர்கள் வந்து அவர்களைக் கடந்து செல்ல முடியாமல் வெளியே விறாந்தையில் நின்று விடுவார்கள்.

### கை கட்டி வாய் பொத்தி..!

ஏதோ எல்லோரும் பூசைக்கு போகின்றார்கள் நாமும் போவோம் என்ற மனநிலையுடன் சிலர் வருகின்றனர். இவர்கள் வாய் திறந்து செபம் சொல்ல மாட்டார்கள். கை குவித்து கண்மூடி செபிக்க மாட்டார்கள். "ஏதோ நடக்கிறது. இதமாய் இருக்கிறது" என்ற மனோ நிலையில் கை கட்டி வாய் பொத்தி........... நிற்பார்கள். வழிபாட்டில் உள்ளார்ந்த ரீதியாகப் பங்கெடுக்காமல் வெறும் சடப்பொருட்களைப் போல இருந்து விட்டுப் போய்விடுகிறார்கள்.

### வெளியே நின்று வேடிக்கை பார்த்து...!

அக்காலத்தில் நமது முன்னோர்கள் தமது வசதிக்குறைவுகளுக்கு மத்தியிலும் பிரமாண்டமான அலயங்களைக் கட்டி நமக்கு விட்டுச்சென்றுள்ளனர். ஆனால் இன்று நாமோ அதற்கு உள்ளே வந்து பக்தியாக வழிபாட்டில் பங்கெடுக்க விருப்பமில்லாமல் இருக்கிறோம். சிலர் ஆலயத்திற்கு உள்ளே எவ்வளவோ இடம் இருந்தாலும் முன்னுக்கு வரமாட்டார்கள். ஆலயத்திற்கு வெளியே - போட்டிக்கோவுக்கு வெளியே நின்று வேடிக்கை பார்ப்பது ஒரு பாஷனாகிவிட்டது. மரத்திற்கு கீழே கூட்டம் கூட்டமாக நின்று கதைத்துக்கொண்டிருப்பார்கள். ஒரு சில இடங்களில் நற்கருணை வழங்கும் நேரம் வழிபாட்டில் இடைவேளை நேரம் போன்று கருதப்பட்டு தேனீர் குடிக்கவும் சிகறட் பற்றவும் செய்கிறார்கள். இவர்களைப்பற்றி என்ன சொல்வது?

### தங்க நகையும் நாகரீக உடையும் ...

வழிபாட்டில் சிலர் அளவுக்கு அதிகமான ஆடம்பர உடுப்புக்களையும் தங்க நகைகளையும் அணிந்து வருவது வழிபாட்டின் மனநிலையை பாதிப்பதாக உள்ளது. திருமண வீட்டிற்கு - தியட்டருக்கு செல்வதற்கும் திருப்பலிக்கு செல்வதற்கும் வித்தியாசம் இருக்க வேண்டாமா? சில பெண்களின் (அலங்) கோலங்களை பார்க்கவே சகிக்க முடியாது. இவர்கள் எங்கே வருகிறார்கள்? எதற்காக வருகிறார்கள்? என்ற பலத்த கேள்வியை எழுப்புகிறது.

நமது வழிபாட்டில் நமது மனநிலைகளைப் பற்றி சுய மதிப்பீடு செய்வோமா? மாற்ற வேண்டியவற்றை மாற்றுவோமா? நீக்க வேண்டியவற்றை நீக்குவோமா? அர்த்தமுள்ள வழிபாட்டை அமைக்க அனைவரும் ஒத்துழைப்போமா?

மீண்டும் மறுமடலில் சந்திக்கும் வரை

இறையாசீர்.

அன்புடன்

அருட்பணியாளர் நேசன்

# புத்தாயிரமாம் புது யுகத்தினுள் இலங்கைத் திருச்சபையின் பயணம் 2001

இலங்கை கத்தோலிகக ஆயர்களின் மிலேனிய மேய்ப்புப்பணி நிருபம்

அங்கம் 6

## குருக்கள் துறவியர்

எமது குருக்களும் துறவிகளும் புதுப்பித்தலுக்கான அழைத்தலுக்கு தம்மையே அர்ப்பணிப்பதற்கு ஆழமான முயற்சியை எடுக்காமலிருக்கும் வரைக்கும் கிறிஸ்தவ சமூகத்தின் உண்மையான புதுப்பித்தலும் நற்செய்தியை அறிவிப்பதற்கான செயல் திறமுடைய செயற[illegible]களும் இடம் பெறவே மாட்டாது. திருத்தந்தை குறிப்[illegible] போன்று மறைபரப்பாளர்கள் இல்லாமல் மறைபரப்புப்பணி எப்படி இ[illegible]ம் பெறாதோ அதே போல சாட்சியாளர்கள் இல்லாமல் சாட்சியமும் இருக்க முடியாது (மீட்பரின் பணி 61). இந்த வேளையிலே அதிகப்படியான குருத்துவ துறவற அழைத்தல்களை எமக்கு தொடர்ந்து தந்து கொண்டிருப்பதற்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். கடந்த காலங்களிலே ஆற்றல் மிக்க ஆண்களும் பெண்களும் எம்மத்தியில் குருத்துவ துறவற அணிகளை அலங்கரித்துள்ளார்கள். தனது திராட்சைத் தோட்டத்தில் அத்தகைய ஆண்களையும் பெண்களையும் இறைவன் தொடர்ந்து அழைத்து வருவார். அவரே புகழப்படுவாராக.

இருந்தும் தொகையைப் பற்றி மட்டும் நாம் திருப்தி அடைந்து விடமுடியாது. குருக்களும் துறவியரும் தமது பணிக்கும் பரிசுத்தத்தின் வழிக்கும் தம்மை முற்றும் முழுமையாக அர்ப்பணிப்பது விலக்கிவிட முடியாத மாபெரும் பொறுப்பாகும். அவர்கள் எல்லோரும் போதகர்களாக மாறுவதிலும் பார்க்க மேலாக புனிதர்களாகவும் தமது முன்மாதிரிகளால் தங்கள் சகோதர சகோதரிகளை புனிதத்தை நோக்கி இட்டுச்செல்பவர்களாகவும் மாற வேண்டும். இதுவே தங்கள் திருப்பணியை முன்னெடுத்துச் செல்வதற்கான பயனுடைய வழியாகும். எனவே நாம் எல்லா குருக்களையும் துறவிகளையும் தனிப்பட்ட புனிதத்துவத்தை நோக்கி ஆர்வத்துடன் முனைந்திட அழைப்பு விடுக்கின்றோம். அவர்கள் முழுமையாக தம்மை ஆண்டவருக்கு அர்ப்பணித்து தாம் விரும்பித் தேர்ந்து கொண்ட இந்த அர்ப்பணத்தை நாளாந்தம் வாழவேண்டும். இதற்காக பல தியாகங்கள் செய்ய வேண்டியிருப்பினும் அவர்கள் பின்வாங்காதிருப்பார்களாக! அவர்கள் தமது திருப்பணியை ஏதோவொருவகை சமூக சேவை என்று கருதக் கூடாது. மாறாக தமது திருப்பணியானது இயேசுவின் உன்னத பணியே என்பதையும் மானடத்தை மீட்கவும் எல்லாப் படைப்புக்களையும் மரணத்தினதும் பாவத்தினதும் அடிமை நிலையிலிருந்து விடுவிக்கவும் ஏற்கின்ற பணியையேயன்றி வேறெதுவுமில்லை என்பதையும் அவர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஆசியாவில் திருச்சபை எனும் ஏடு கூறுவது இவண நோக்கற் பாலது "ஆசியாவின் மக்கள் குருக்களை வெறும் அன்புப் பணியாளர்கள் அல்லது நிறுவன நிர்வாகிகள் என்று கருதுவதைத் தவிர்த்து அவர்கள் ஆன்மீக ஆழத்திலே தமது மனத்தையும் இதயத்தையும் பதித்தவர்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் ஆண்டவரின் பற்றார்வம்மிக்க சாட்சிகளாக திகழ வேண்டும். தங்கள் செபவாழ்க்கை, பற்றார்வமிக்க பணி, எடுத்துக்காட்டான நடைமுறை என்பன வாயிலாக குருகுலத்தர் கிறிஸ்துவின் பெயரால் தாங்கள் மேய்ப்புப்பணி புரியும் குழுமங்கள் மத்தியில் நற்செய்திக்கு வலிமை மிக்க சாட்சியம் பகருகிறார்கள் (ஆசியத் திருச்சபை 43). அதேபோன்று துறவிகளும் அவர்களுடைய ஏழ்மையின் எளிமை நிறை நற்சான்று, தற்பரித்தியாகம், தூய்மை, நேர்மை, கீழ்ப்படிதல் மற்றும் தன்னலமறுப்பு என்பவை வலிமை மிக்க சாட்சியமாகி நல்மனம் கொண்ட அனைத்து மக்களையும் ஆழமாகத் தொடும் என்பதை கருத்திற் கொள்ள வேண்டும்" (ஆசியத் திருச்சபை 44). எனவே எல்லாக் குருக்களையும் துறவிகளையும் ஆண்டவர்மீது தாம் கொண்டுள்ள அர்ப்பணத்தை புதுப்பிக்க தூண்டி வேண்டுகிறோம். கத்தோலிக்க சமூகத்தை ஒரு உண்மை சாட்சியமளிக்கும், நற்செய்தி அறிவிக்கும் சமூகமாக உருமாற்றிடும் வழியிலே அவர்கள் உன்னத இயக்கிகளாக மாறிடவும் வேண்டுகின்றோம். அவர்கள் தங்கள் மக்களை வழிநடத்தும் மேய்ப்பர்களாகவும் எல்லாவற்றிற்கும் மேலாக உண்மை கிறிஸ்தவ சீடத்துவத்துக்கு முன்மாதிரிகளாகப் புனிதத்தோடு திகழும் அன்பு நிறை அடியார்களாகவும் மாறிட வேண்டப்படுகின்றனர். அவர்கள் தங்கள் மந்தையின் இதயங்களை ஆழமான விசுவாச உணர்வுகளினாலும் மறையறிவுப் பணி அர்ப்பணத்தினாலும் பற்றியெரியச் செய்ய செபங்களையும் வேண்டுதல்களையும் எப்பொழுதும் ஒப்புக் கொடுப்பார்களாக! இறைவனிடம் உருக்கமாக வேண்டிய (லூக்.22: 44) கிறிஸ்துவைப் பின்பற்றிச் செபித்தலானது ஒரு குருவினதும் துறவியினதும் இதயத்தை ஆண்டவர்பால் திறந்துவிட்டு மேய்ப்புப் பணிசார் அன்புக்கு அவர்களை ஈர்த்தெடுக்கிறது.

## முடிவுரை

இந்தப் புது மில்லேனியத்துக்குள் பயணம் செய்யும் வேளையில் எமது விசுவாசத்தை முழுமையாக வாழ்வதில் பல சவால்களையும் கஸ்ரங்களையும் எதிர்நோக்கிடினும் எம்மாவுஸ் வழியில் இரண்டு சீடர்களுடன் இணைந்து சென்ற அந்த ஆண்டவர் எம்மோடு இணைந்து செல்லவேண்டுமென்று குரலெழுப்பிக் கூப்பிட்டு எமது இதயங்களை அவருக்காகவும் அவரது மறைப்பணிக்காகவும் அன்பினால் பற்றியெரியச் செய்யவேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றோம். எவ்வாறு சீமோன் பேதுருவும் அவர் சகோதரர்களும் ஆண்டவரின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து தமது வலைகளை கலிலேயக் கடலுக்குள் வீசி அதிகப்படியான மீன்பாட்டை பெற்றார்களோ (லூக் 5: 4-11) அது போல நாமும் அவர் மேல் கொண்ட எமது விசுவாசத்தில் இருந்து வரும் எம் எளிய முயற்சிகளில் எம்மோடிணைந்து செயல்படவும் அவரை வேண்டி நிற்கின்றோம். ஏனெனில் நாம் அவரைச் சார்ந்து வாழ்கின்றோம், இயங்குகின்றோம் என்பதை அறிந்திருக்கின்றோம் (தி.ப 17:28).

இத்தகைய நம்பிக்கைகளையும் அபிலாசைகளையும் எமது விண்ணக அன்னை மரியாளிடம் கையளிக்கின்றோம். அவர்களுடைய பரிந்துரையால் சமாதானமும் சுபீட்சமும் உண்மையான ஆன்மீக வீடுபேறும் எமது மக்களுக்கு இந்த புதிய மில்லேனியத்தில் கைகூட வேண்டுமென ஆசிக்கின்றோம். அத்தோடு இசையாஸ் இறைவாக்கினர் கூறுவது போன்று "அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக்கொள்வார்கள். ஓர் இனத்திற்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது. அவர்கள் இனி ஒருபோதும் போர்ப் பயிற்சி பெற மாட்டார்கள்" (இசை. 2:4) என்ற நிலை இலங்கைத் திருநாட்டில் ஏற்பட்டு அது சமாதானத்தின் புகலிடமாகத் திகழ்ந்திட அன்னை மரியாள் பரிந்துரைக்க வேண்டி நிற்கின்றோம்.

(முற்றும்)

# மறைக்கல்வி நிலையச் செய்திகள்

### மறைக்கல்வி வாரம் - மறைக்கல்வி தினம்

மன்னார் [illegible]றைமாவட்டத்தில் ஐப்பசி மாதம் 8ம் திகதியிலிருந்து 14ம் திகதி வரை மறை[illegible]வி வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது. மறைக்கல்வி தினம் ஐப்பசி மாதம் 14ம் [illegible]ஞாயிறு தினம்

### மறைக்கல்வி தேர்வு

திரும[illegible]றைப்பணி நிலையத்தினால் வழமையாக ஆண்டு 3 தொடக்கம் 11 வரையிலான கத்[illegible]லிக்க மாணவர்களுக்கு நடாத்தப்படுகின்ற மறைக் கல்வித் தேர்வானது இவ்வருடம் கார்த்திகை மாதம் 10ம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

### மறையாசிரியர் தேர்வு

[illegible]ய நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற 2ம் 3ம் தேர்வும் மறைமாவட்டத்தினால் நட[illegible]படுகின்ற முதலாம் தேர்வும் கார்த்திகை மாதம் 17ம் திகதி சனிக் கிழமை நடைபெறும். இத் தேர்வுக்கான ஆயத்த வகுப்புகள் மன்னார், முருங்கன், வவுனியா மற்றும் மடு மறைக் கோட்ட மட்டங்களில் இடம் பெறும்.

### மீட்டல் வகுப்பு

க.பொ. த. சாதாரண தர மாணவர்களுக்கான மீட்டல் வகுப்பு கார்த்திகை மாதம் மறைக் கோட்டங்களில் இடம் பெறும்.

### விற்பனை

[illegible] சித்திரப் பாடங்கள், வாழ்த்து மடல்கள், மற்றும் இந்தியாவிலிருந்து பெறப்பட்ட நூல்கள் ஆகியவற்றை மறைக்கல்வி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### செடக் நிறுவன தேசிய....

1ம் பக்கத் தொடர்ச்சி

பொதுவாக இது போன்ற தேசிய இயக்குனர் பொறுப்புக்கள் கொழும்பு மறைமாவட்ட குருக்களுக்கே கொடுக்கப்படுவதுண்டு. நாடளாவிய ரீதியில் இயங்கும் இத்தேசிய நிறுவனம் அடிகளாரின் பதவிக்காலத்தில் பல நிவாரணப் பணிகளையும் அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது. குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளில் தலத்திருச்சபைகளோடு இணைந்து பல பணிகளை முன்னெடுத்தது. இவருடைய காலத்தில் கொழும்பில் உள்ள இந்நிறுவனத்தின் அலுவலகக் கட்டிடம் நவீன வசதிகளுடன் சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். செடக் நிறுவன இயக்குனர் பணியிலிருந்து விடை பெறும் அடிகளார் அடுத்து என்ன பணியை ஏற்கவுள்ளார் என்பது பற்றிய செய்தி இன்னும் மன்னாவுக்கு தெரிய வரவில்லை.

உங்கள் மன்னா ஆண்டு சந்தாவை புதுப்பித்து விட்டீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் மன்னார் மறைமாவட்டத்திற்கு வருகை தந்த

# இயேசு சபை அகதிப்பணியின் இந்தியப் பொறுப்பாளர் அருள்பணியாளர் வின்னி யோசப் அவர்களுடனான நேர்காணல்

அருள்பணியாளர் வின்னி யோசப் இயேசுசபை அகதிப்பணியின் இந்தியப் பொறுப்பாளராக இருந்து அரும்பணி புரிகின்றார். அமைதியானவர். பழகுவதற்கு இனிமையானவர். அண்மையில் மன்னாருக்கு வருகை தந்த அடிகளாரோடு மன்னாவுக்காக உரையா[illegible]ோம். இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து சென்று இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டு [illegible]தி முகாம்களில் வாழும் நம்மவர்களின் வாழ்வுநிலை பற்றிய பல சுவாரஷ்யமான தகவல்க[illegible] பகிர்ந்து கொண்டார். ஒரு காலைப் பொழுதில் மன்னா பணியகத்தில் அடிகளாரைச் சந்தித்தோம். (பதிப்பாசிரியர்)

• தந்தையே! தமிழ்நாட்டிலுள்ள ஈழத்தமிழ் அகதிகளின் வாழ்க்கைநிலை பற்றி கூறுவீர்களா?

தமிழ் நாட்டில் 125 அகதி முகாம்கள் உள்ளன. பொதுவாக ஓரிரு மாவட்டங்களைத் தவிர எல்லா மாவட்டங்களிலும் இம் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய எண்பதாயிரம் மக்கள் இம்முகாம்களில் வாழ்கின்றனர்.

பொருளாதாரத்தை எடுத்துக்கொண்டால் அரசாங்கம் ஒவ்வொரு குடும்பத் தலைவர்களுக்கும் மாதம் 600 ரூபா வழங்குகின்றது. வீட்டிலுள்ள மற்றவர்களுக்கு 160 ரூபாவும் சிறுவர்களுக்கு 125 ரூபாவும் மாதாந்தக் கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது. அத்துடன் பருப்பு, மா, சீனி, போன்ற பொருட்களும் வழங்கப்படுகின்றது. அரச நியாய விலைக் கடைகளில் 58 பைசா வீதம் ஒரு கிலோ அரிசி வழங்கப்படுகின்றது. இதை வைத்து அவர்கள் வாழ்க்கையை முழுமையாக வாழமுடியாது. எனவே இவர்கள் கூலி வேலை செய்துதான் வாழ வேண்டியுள்ளது. றோட்டுப்போடுதல், கல்லுடைத்தல், கொத்தனார் வேலை, தச்சுவேலை, மேசன்வேலை மற்றும் பெயின்ற் அடிக்கும் வேலை என்பவற்றைச் செய்கின்றார்கள். இந்த வேலைகளை ஈழத்தமிழ் அகதிகள் திறமையாகவும் நேர்மையாகவும் செய்வதனால் தமிழ்நாட்டு தொழிலாளர்களை விட இந்த அகதி மக்களையே தமிழ்நாட்டு மக்கள் விரும்பி வேலைக்கு அமர்த்துகின்றனர்.

பெண்களும் இளம்பெண்களும் ஆலைகளில் வேலை செய்கின்றார்கள்.

• அங்குள்ள அகதி முகாம்கள் (குடிசைகள், வீடுகள்) எப்பாடியாக அமைக்கப்பட்டுள்ளன?

முகாம் நிலைமை மோசமாக உள்ளது. தனித்தனி வீடுகள் இல்லை. தொடர் வீடுகள்தான். பல வீடுகள் ஒரு ஆண்டு இரண்டு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டவை. இந்த மக்கள் 11 ஆண்டுகளாக இந்தக் குடிசைகளில் வாழ்கின்றனர். முக்கால்வாசி முகாம்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன. மக்கள் வேலைசெய்து பணம் உழைத்துத்தான் இவற்றைத் திருத்த வேண்டும். குடிதண்ணீர் மலசலகூட வசதிகள் என்பன பல இடங்களில் பிரச்சினையாக உள்ளது.

• அங்குள்ள தமிழ் அகதிகளின் ஆன்மீக வாழ்வு பற்றிக் கூறுவீர்களா?

இவர்கள் ஆயன் இல்லா ஆடுகள் போல் பல இடங்களில் உள்ளனர். யாராலும் வழிநடத்தப்படாமல் தங்கள் விசுவாசத்தை இழந்துபோகக் கூடிய நிலையில் உள்ளனர். இந்த மக்கள் அடிப்படையில் ஆழமான விசுவாசம் கொண்டவர்கள். இருந்தும் இவர்களுக்கென்று அருகிலே அலயங்கள் இல்லாத காரணத்தால் இந்த மக்கள் தங்க வைக்கப்பட்ட சூழ்நிலையில் அங்குள்ள பங்குத்தந்தையர்கள் இவர்களை அணுகமுடியாத சூழ்நிலையினால் திருப்பலி, அருள்சாதனங்கள் இல்லாத நிலைமையினால் இவர்களின் இன்றைய விசுவாசம் தளர்ந்த நிலையில் உள்ளது. இதனால் பல மக்கள் பிரிந்த சபைக்களுக்கும் பிற மதங்களுக்கும் சென்றிருப்பது உண்மைதான்.

• இந்த மக்களின் கல்வி வாழ்வு எப்படியுள்ளது?

இந்த முகாம்களில் ஏறக்குறைய 25000 ற்கும் அதிகமான மாணவர்கள் உள்ளனர். இங்குள்ள மக்களில் 85 வீதமானவர்கள் கல்வியறிவு படைத்தவர்கள். உலகத்திலே அதிகளவு கல்வியறிவுகொண்ட அகதி மக்கள் ஈழத்தமிழ் அகதிகளே!

பாலர் பாடசாலை, போதனா மையம், மாணவர் மன்றங்கள் மற்றும் மாணவர் விடியல் போன்ற பத்திரிகைகள் இவர்களின் கல்வி வாழ்வை ஊக்கப்படுத்துகின்றன. மாவட்ட ரீதியிலான வாழ்வியல் கருத்தரங்குகள் கோடை விடுமுறைக்கால சிறப்பு ஆங்கில கணித வகுப்புக்கள் போன்றவற்றால் மாணவர்கள் கல்வியில் ஊக்கம் பெற்று சிறப்பாக முன்னேறுகின்றனர். பொதுவாக பிளஸ் 2 (க. பொ. த. உயர்தரம்) முடித்த மாணவர்கள் அனைவருமே கல்லூரிக்குச் செல்வதற்கான வாய்ப்புண்டு. இன்று நமது மாணவர்களில் 650 க்கும் அதிகமானவர்கள் கல்லூரிக்குச் (Collage) செல்கின்றார்கள். இவர்களில் சிலர் மருத்துவக்கல்லூரி, விவசாயக்கலூரி மற்றும் கணினிப் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் கல்வி கற்கின்றனர். இந்த ஆண்டு மட்டும் நமது முகாமிலுள்ள 10 மாணவர்கள் மருத்துவக் கல்லூரிக்குச் சென்றுள்ளனர். எனவே இவர்கள் தாய் நாட்டுக்கு திரும்பி வரும்போது புத்தி ஜீவிகளாக - மருத்துவர்களாக - பொறியியலாளர்களாக வருவார்கள்.

பள்ளி இடைநிறுத்தம் செய்த மாணவர்ளுக்கு தொழிற்கல்வி பயிற்சி வழங்கப்படுகின்றது. மாணவியருக்கு வாழ்வியல் பயிற்சி மையங்களூடாக தையல் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

• எத்தகைய சமுக நிறுவனங்கள் இந்த மக்களுக்கு உதவி செய்கின்றன என்று கூறுவீர்களா?

இயேசு சபை அகதிப்பணி அமைப்பின் J.R.S (Jesuits Refugees Service) மூலமாகவே நாம் கல்விப் பணியை முன்னெடுத்துச் செல்கின்றோம். OFERR (Organization For Eelam Refugees Rehabilitation) மற்றும் மறைமாவட்ட சமுக சேவை அமைப்புக்கள் மூலமாகவும் பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கப்படுகின்றன. OFERR அமைப்பு தந்தை செல்வா அவர்களுடைய மகன் சந்திரகாசனின் தலைமையில் இயங்குகின்றது. பெற்றோரை இழந்த



450 மாணவர்கள் பல்வேறு விடுதிகளில் (Hostels) தங்க வைத்து கல்வி கற்பிக்கப்படுகின்றனர். பாடசாலைக் கட்டணம், விடுதிக்கட்ணம், புத்தகச் செலவு மற்றும் எழுது கருவிகள் போன்ற உதவிகளை J.R.S மற்ற அமைப்புக்களோடு சேர்ந்து செய்கின்றது. இந்த அகதி முகாம்களில் போதனா மையம், பாலர் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் என்பவற்றை J.R.S செய்கின்றது. சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டங்கள், விதவைகளுக்கு சுயதொழில் தொடங்குவதற்கான வாய்ப்புக்கள் அளித்தல் போன்றவற்றை J,R.S ம் ஏனைய தொண்டு நிறுவனங்களும் வழங்குகின்றன.

• இங்குள்ள மாணவர்களின் ஒழுக்க வாழ்வு பற்றி என்ன



சொல்கின்றீர்கள்?

பொதுவாக இந்த மாணவர்களைப் பற்றி சொல்லப்படுக்[illegible]றைபாடு என்னவென்றால் இலங்கையிலிருந்த ஒழுக்கம், கட்டுப்பாடு, [illegible]திப்பீடு குறைந்து வருகின்றன என்பதாகும். இந்த மாணவர்கள் மத்தியில் [illegible]னிமாக் கலாச்சாரம் மற்றும் ரசிகர் மன்றங்கள் என்பன பெரிகி [illegible]ருவது கவலைக்குரியது. இளவயதுத் திருமணங்கள், காதல் திரும[illegible]ங்கள், வீட்டை விட்டு ஓடிப்போகின்ற நிலைமைகள் மற்றும் தற்கொலைகள் போன்றவற்றையும் நாம் மறுக்கமுடியாது. பெற்றோர் பெரியோருக்கு மதிப்பு, மரியாதை கொடுக்கின்ற நிலைமை மறைநது வருகின்றது. முகாம்களில் கலாச்சாராம் பண்பாடு நிலைமைகள் சீரழிந்த நிலைமையை கவலையோடு பார்க்க முடிகின்றது. இதற்குக் காரணம் பெற்றோரா?, அல்லது மாணவர்களா? அல்லது அவர்கள் வாழ்கின்ற முகாம் சூழ்நிலையா? அல்லது அகதி என்ற வாழ்க்கை நிலை இவர்களை இந்நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளதா? சமூகக்கட்டுப்பாடு இல்லாத நிலைதான் காரணமா? போன்ற பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இந்நிலையைப் போக்குவதற்காக பல வழிமுறைகளை ஆராய்ந்து வருகின்றோம்.

• அங்குள்ள ஈழத்தமிழ் அகதி மக்களை இந்திய மக்கள் அல்லது அரசாங்கம் ஒரு சுமையாகக் கருதுகின்றதா? இவர்கள் மட்டில் எத்தகைய மன உணர்வு அங்கு நிலவுகின்றது?

ராஜீவ் காந்தி இறந்த பிற்பாடு இந்திய அரசாங்கமும் தமிழ் நாட்டு மக்களும் இவர்ளை வித்தியாசமாக பார்த்த நிலைமை இருந்தது. இதனால் தொண்டர் நிறுவனங்கள் முகாம்களுக்குச் சென்று பணி செய்வதை அரசாங்கம் தடுத்தது. இந்தத் தடை இன்றும் சட்டத்தில் நீடித்துக் கொண்டு இருந்தாலும் தொண்டர் நிறுவனங்கள் செய்கின்ற மனிதாபிமான பணிகளை அரசாங்கம் ஊக்கிவிப்பதுமில்லை தடைசெய்வதுமில்லை. கண்டும் காணாத நிலைமை! தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் இந்த ஈழத்தமிழ் அகதி மக்களை சுமையாகப் பார்ப்பது இல்லை. ஏனெனில் கடலில் கரைத்த பெருங்காயத்தைப் போன்று பரந்த தமிழ்நாட்டு சனத்தொகையின் மத்தியில் 200, 300 குடும்பங்கள் என்ற வகையில் இவர்கள் செறிந்து வாழ்கின்றார்கள். தமிழ்நாட்டு மக்களும் ஈழத்தமிழ் மக்களும் நல்ல உறவோடு வாழ்கின்றார்கள். அரசாங்கம் அகதி மாணவர்களுக்குக் கொடுத்த சிறப்பச் சலுகை மூலமாகவே மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் உயர் கல்விவலியைப் பெற முடிந்தது. இந்த நிலைமை இன்றைய புதிய ஜெயலலிதா அரசாங்கத்திலும் தொடர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

• முடிவின்றித் தொடர்ந்து கொண்டிருக்கும் ஈழந்ததமிழ் மக்களின் வீடுதலைப்போராட்டம் குறித்து தமிழ்நாட்டு அரசு மற்றும் மக்களின் இன்றய நிலைப்பாடு என்ன?

தமிழன் என்ற வகையில் ஒவ்வொரு இந்தியத் தமிழனும் ஈழத்தமிழர்களின் துன்பங்கள் குறித்தும் அவர்களின் விடுதலை குறித்தும் உணர்வு ரீதியாகப் பிணைக்கப்பட்டு இருக்கின்றார்கள். ராஜீவ் கொலைக்குப் பின்னர் இந்த நிலைமையில் சிறிய மாற்றம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால் அது நீடிக்கவில்லை. தமிழ்நாட்டு அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் ஒரு சிலர் தொடர்ச்சியாகவே ஈழத்தமிழர் போராட்டத்திற்கு ஆதரவாக பேசிவருகின்றனர். ஆனால் பல அரசியல்வாதிகள் தமது அரசியல் சுய லாபங்களுக்காக தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்வதை நாம் பார்க்கின்றோம்.

• அங்குள்ள ஈழத்தமிழ் அகதி மக்கள் எப்போது நாடு திரும்புவார்கள்?

அங்குள்ள அகதி மக்கள் பெரும்பான்மையானோர் எப்போது நாடுதிரும்புவோம் என்ற ஏக்கத்தோடு வாழ்கின்றார்கள். இங்குள்ள அரசியல் யுத்த சூழ்நிலை காரணமாக இங்கு சமாதானம் ஏற்படாதவரை அங்குள்ள மக்கள் இங்கு திரும்பி வருவது இப்போது சாத்தியமில்லை என்றே கருதுகிறேன்.

• உங்களுடைய இலங்கை வருகைபற்றி - மன்னார் வருகை பற்றி கூறுவீர்களா?

இயேசுசபை அகதிப்பணியினர் செய்கின்ற செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடவும் ஊக்கிவிக்கவும் இங்கு வந்தேன். அத்துடன் இந்தியாவில் உள்ள அகதி மக்களுக்கும் இங்குள்ள மக்களுக்குமிடையில் பிரிந்து இருக்கின்ற நிலையை-அறுபட்டு இருக்கின்ற தொடர்புகளை சீர்செய்வதும் என் பயணத்தின் நோக்கமாக இருந்தது. அத்துடன் மன்னார் ஆயர் கேட்டுக்கெண்டதற்கு இணங்க இங்குள்ள இளைஞர் யுவதிகளுக்கு கருத்தரங்கை நடத்தினேன்.

• இங்கு (மன்னாரில்) நீங்கள் அவதானித்தவற்றை எம்மோடு பகிர்ந்து கொள்ள முடியுமா?

இங்கு நான் பார்த்த மகிழ்ச்சியான விடயம் இங்குள்ள இளைஞர் யுவதிகள் உயிர்த் துடிப்புள்ள விசுவாசம் கொண்டவர்களாக உள்ளனர் என்பதாகும். பங்குத்தந்தையருடன் இணைந்து செயற்படுகின்றனர். பிரச்சினைகளுக்கு மத்தியிலும் மனம் தளர்ந்து போகாது கடவுள் தங்களைக் காப்பாற்றுவார் என்ற உறுதியுடன் வாழ்கின்றனர். அதேவேளை நான் அவதானித்த இன்னுமோர் விடயம் அது சாதகமானதா பாதகமானதா என்று என்னால் சொல்ல முடியவில்லை – பிரச்சினைகளுக்க மத்தியில் தொடாந்து வாழ்வதாலோ என்னவோ தெரியவில்லை உயிர்ப்பலிகளைப்பற்றி சிந்திக்காத நிலை - உணர்வற்ற - மரத்தப்போன ஒரு மனநிலையைப் பார்க்கின்றேன்.

• இங்குள்ள ஈழத்தமிழ் திருச்சபை தங்களுக்கு எத்தகைய உதவிகளைச் செய்யவேண்டும் என அங்குள்ள ஈழத்தமிழ் அகதிகள் எதிர்பார்க்கின்றார்கள்?

இங்குள்ள குருக்கள் இந்தியாவுக்கு வருகின்றபோது தம்மைப் பார்க்க வரவேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். பார்க்காமல் போகின்றபோது அதை நினைத்து பெரிதும் வருத்தப்படுகின்றார்கள்.

• இறுதியாக அங்குள்ள அகதி மக்களுக்கும் இங்குள்ள மக்களுக்கும் நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

எனது அனுபவத்திலிருந்து நான் சொல்ல விரும்புவது என்னவெனில் உறவுகள் பிரிந்து வாழ்வது நல்லதல்ல என்பதாகும். அம்மா இங்கு அப்பா அங்கு அல்லது வெளிநாட்டில் பெற்றோரைப பார்க்காத நிலை! இதனால் அன்பு இல்லாத நிலை! உளவியல் பிரச்சினைகள்! இந்த நிலையில், சம்மந்தப்பட்டவர்களை நான் கேட்டுக்கொள்வது நீங்கள் எங்கு இருந்தாலும் ஒன்றாக இருங்கள். இங்கேயோ அங்கேயோ ஒன்றாக இருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் பொழில்



## சிறுவர் சிறுகதை



### தாய் சொல்லைத் தட்டாதே

நாவலூர் என்னும் சிறிய கிராமத்திலே தாயும் மகனும் வாழ்ந்து கொண்டிருந்தனர். இவர்கள் வறியவர்கள். இதனை தாங்க முடியாத மகன் தான் வேறு ஊர் சென்று பணம் சம்பாதிக்க எண்ணினான். தன் எண்ணத்தை தாயிடம் கூறினான். அவளும் அதற்குச் சம்மதித்தாள். அவன் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில் அந்தத் தாயானவள் மகனின் பாதுகாப்பிற்காக ஓர் சிறிய பெட்டியைக் கொடுத்[illegible] வனை வழியனுப்புகிறாள். அவனும் மறுப்பின்றி அதனை வாங்கிக்கொ[illegible] சென்றான். வழியில் களைப்பால் ஓர் மர நிழலின் கீழ் தாய் கொடுத்த [illegible]யை அருகில் வைத்து விட்டு அயர்ந்து தூங்கி விட்டான். அப்பொழுது அங்கு வந்த நாக பாம்பு அவன் உறங்கிக் கொண்டிருந்த மரத்திற்கு அவனைத் தீண்டும் நோக்குடன் சென்று கொண்டிருந்தது. அவனருகில் இருந்த பெட்டியை கண்டதும் அதற்குள் தலையை நீட்டியது. பெட்டியிலிருந்த நண்டு தன் கொடுக்கால் பாம்பை இரு துண்டாக வெட்டிக் கொன்று விட்டது. சற்று நேரத்தில் கண் மகன் விழித்து பாம்பு இறந்து கிடப்பதைக் கண்டான். தனது தாயின் சாதுரியமான செயலைக் கண்டு மனம் மகிழ்ந்தான். தான் தாய் சொல்லைத் தட்டாது நடந்தபடியால் அவளும் என்னை அன்பு செய்தாள் என்ற பெருமிதத்துடன் எழுந்து நடக்கலானான். இக் கதை மூலம் தாயின் அன்பையும் கரிசனையும் அறிந்த நாம் தாய் சொல்லைத் தட்டாது நடப்போம் என்று உறுதி எடுப்போம்.

ஜோ. நிரோசன், தரம் 8, 10 7/5, சிதம்பரபுரம்
நலன்புரி நிலையம், வவுனியா

## புனிதர்கள் பாதையில் பயணிப்போம்

## மாதம் ஒரு புனிதர்

### புனித டோமினிக் சாவியோ

டோமினிக் சாவியோ வட இத்தாலியில் உள்ள ரீவா என்னும் கிராமத்தில் 1842ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ம் திகதி பிறந்தார். தேவ தாயின் பேரில் பக்தியுள்ள அவரது தாயார் அவரைத் தேவமாதாவுக்கு ஒப்புக் கொடுத்தார். தாய் தமது மகன் டோமினிக்கிற்கு கற்றுக் கொடுத்த முதல் வார்த்தைகள் இயேசு, மரி, சூசை என்பதுதான். அவரது பெற்றோர் ஒவ்வொரு நாள் இரவிலும் செபமாலை சொல்லுவார்கள்.

டோமினிக் சாவியோவும் தமது தாய், தந்தையருடன் சேர்ந்து இரவில் செபமாலை சொல்லுவார். ஒரு நாள் இரவில் அவரது தந்தை அவரிடம் "மகனே உனக்குக் களைப்பாக இல்லையா" என்று கேட்டார். அதற்கு அவர் "இல்லை, அப்பா உங்களோடு சேர்ந்து செபமாலை சொல்ல விரும்புகிறேன்" என்றார்.

ஒருநாள் டோமினிக் தலைவலியாலும் இருமலாலும் அவதிப்பட்டார். வியாதியால் மிகவும் வருந்தினார். தன் தோழர்களிடம் அனேக ஆத்துமங்களின் மனம் திரும்புதலுக்காக தன்னை ஒப்புக்கொடுத்திருப்பாதாகத் கூறினார். வைத்தியர் டோமினிக்கிடம் "பத்துத் தடவை இரத்தம் எடுக்க வேண்டும் அந்தப்பக்கம் பார்" என்றார். அவரோ சிரித்து "இயேசுவின் கைகளில் குத்திய ஆணியை விட எவ்வளவோ அற்பமானது இது" என்று கூறினார்

1857ம் வருடம் மார்ச் மாதம் 9ம் திகதி மாலையில் டோமினிக் தம் தந்தையைக் கூப்பிட்டு "நேரமாகி விட்டது" என்றார். அவரோ "மகனே உனக்கு எதுவும் தேவையா" என்றார் "ஆம் என் செபப் புத்தகத்தை எடுத்து மரிக்கிறவர்களுக்காகச் சொல்லும் செபத்தைச் சொல்லுங்கள்" என்றார். பின்னர் உயிர்விட்டார்.

ம. [illegible], தாழ்வுபாடு. மன்னார்.

## சிறுவர் தொடர் கதை

## புனித லொயலா இஞ்ஞாசியார்

அங்கம் 4



13 இஞ்ஞாசியார் கால் நலம் பெற்ற பின்பு, இயேசுவின் அன்னை மரியாளின் கோவிலுக்குத் திருயாத்திரையாகச் சென்றார். மொன்சேராத் என்ற மலையில் இக்கோவிலானது கட்டப்பட்டிருந்தது. அக்கோவிலுக்குப் போகும் வழியில் ஒரு மனிதனைச் சந்தித்தார். அவன் இறைவனைப் பற்றியும், மதத்தைப் பற்றியும் குறிப்பாக மாதாவைப் பற்றியும் அசிங்கமாகப் பேசினான்.

14 இஞ்ஞாசியார், அவன் கூறியது அபத்தமானது என்றும் மரியாளின் மகிமையைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறினார். ஆனால் அந்த மனிதனோ அவைகளையெல்லாம் பொருட்படுத்தாது, மரியாளைப்பற்றிக் கேவலமாகப் பேசிவிட்டு, குதிரைமீது பாய்ந்து விரைவாகச் சென்றுவிட்டான். ஆனால் இஞ்ஞாசியாரோ மரியாளின் பெருமையைப் பற்றி அவனுக்கு எடுத்துரைப்பது அவரது கடமை என்று எண்ணினார். தானும் தன் குதிரைமீது ஏறி அவனைப் பின்தொடர்ந்தார்.

15 மிக வேகமாக அந்த மனிதனைப் பின்தொடர்ந்தார். விரைவாகவே அவனைப்பிடித்து, மரியாளைப் பற்றி அவன் கூறியதைத் திருத்திக் கொள்ளவேண்டும் அல்லது அவனைத் தரையில் தள்ளி ஈட்டியால் குத்த வேண்டும் என்று எண்ணினார். அப்படி எண்ணிக்கொண்டே செல்லும் பொழுது, தான் செய்வது கடவுள் சித்தம்தானா என்ற சந்தேகம் மனத்தில் எழுந்தது.

16 என்ன செய்வது என்று தெரியாது குதிரையின் கடிவாளத்தை விட்டுவிட்டார். அக்குதிரை எப்பக்கம் போகிறதோ அதன் வழி விட்டுவிட நினைத்தார். நான்கு சாலைகளும் சந்திக்கின்ற இடம் வந்ததும் இஞ்ஞாசியாரின் குதிரை அந்த மனிதன் போன திசைக்கு எதிராகச் சென்றது. இஞ்ஞாசியார் இதைக் கண்டு மகிழ்ச்சியோடு மொன்சேராத் மலைக்குச் சென்றார். (தொடரும்)

## கவிதைப் பூக்கள்

### நாளை வருவான் ஒரு மனிதன்



நாளை வருவான் ஒரு மனிதன்
ஞாலத் திசைகள் கோலமிட
நாளை வருவான் ஒரு மனிதன்
உள்ளத் தெளிவின் நிலவினிலே
ஒளிரும் நினைவாம் சுடரினிலே
வெள்ளைப் புனலின் கலப்பினிலே
விடியற் பரிதி உருவினிலே
நாளை வருவான் ஒரு மனிதன்

காலச் சுழலின் சுழிகளிலே
கலந்து சுழலும் மேதையரின்
கோலக் கனவின் கருக்குழியில்
கோடிக் காலம் தவ மிருந்தோன்
நாளை வருவான் ஒரு மனிதன்

அ. ஜீவிதா குரூஸ்
தரம் - 10, அரிப்பு.

### இறைவன் பாதையில்......



இறைவன் காட்டிய பாதையில்
அனைவரும் சென்றிடுவோம்
அமைதியை நிலை நாட்ட - நாம்
விசுவாசத்துடன் சென்றிடுவோம்
கரடு முரடு நிறைந்த பாதையில்
அன்பை சுவைத்திட சென்றிடுவோம்

இறைவனின் வார்த்தையை ஏற்று - நாம்
இனிதே மகிழ்வுடன் செல்வோம்
கள்ளம் கபடமற்ற எம் உள்ளங்களில்
கருணை தேவனின் அன்பை - நாம்
ஆர்வத்துடன் ஏற்று வாழ்ந்திடுவோம்.

டினேஸ் அன்ரனி,
சின்னக்கரிசல்,
மன்னார்.

## வாங்க சிரிக்கலாம்



வாசகர்களே!
யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம். நீங்கள் படித்து , கேட்டு சுவைத்து மகிழ்ந்த நகைச்சுவைத் துணுக்குகளை எமக்கு எழுதி அனுப்புங்கள். நீங்கள் பெற்ற மகிழ்ச்சியை மற்றவர்களும் பெறும்படி செய்யுங்கள்.
(பதிப்பாசிரியர்)

வழுக்கைத் தலையர் : என்னப்பா... எனக்கு தலைமயிர் வெட்டினதுக்கு இவ்வளவு காசா..?
சலூன்காரர் : தலைமயிர் வெட்டினதுக்கு இல்லை, உங்க தலையில் முடி எங்கேயிருக்குன்னு கண்டுபிடிச்சதற்குத் தான்..!

ஒருவர்: நீங்க ஆட்டோ ஓட்டுகிறவரா..?
மற்றவர்: அட... எப்படிக் கண்டுபிடிச்சீங்க?
முதலாமவர்: எல்லோரும் சாதாரணமா சிரிப்பாங்க.. ஆனால் நீங்க மட்டும் குலுங்கி குலுங்கி சிரிக்கிறீங்களே!.

ஒருவர்: அந்தத் தியேட்டரில் சிகரெட் பிடிக்கிறவர்களைத் தண்டிக்காமல் புகைபிடிக்காதீங்க என்று சாந்தமாக சொல்லி அனுப்புறாங்களாமே..?
மற்றவர்: ஆமாம், அங்கே ஓடறது காந்தி படமாச்சே...

கண் டாக்டர்: பார்வை நேரம் 6 - 9 மணி வரைனு போட்டிருக்கே .. இவருக்கே பார்வை மூன்று மணி நேரம்தான் தெரியும் போலிருக்கே..!

ஒருவர்: [illegible]ம் கேட்க வந்துட்டு கடைசியிலே உட்கார்ந்து இருக்கீங்[illegible]
மற்றவர்: [illegible]மக்கும் சங்கீதத்துக்கும் ரொம்ப தூரம்ங்க ..அதுதான்.

ஒருவர்: உன் வீட்டுக்காரர் என்ன எப்ப பார்த்தாலும் தலைல கட்டு போட்டிருக்காரு.
மற்றவர்: நான்தான் சொன்னேனே ...அவரு சின்ன விஷயத்துக்கெல்லாம் மண்டையைப் போட்டு உடைச்சுப்பாருண்ணு........

தனியார் வைத்தியசாலை டாக்டர்: ஓகே... நீங்க இவ்வளவு தூரம் கெஞ்சிக் கேக்கிறதாலே இந்த வாரத்துக்குள் உங்களுக்கு ரிக்கற் வெட்டலாம்னு இருக்கின்றேன். ஆனா ஒரு கண்டிஷன். நீங்களே வேற ஒரு வருத்தக்காறரை இங்க கூட்டி வந்து விடனும். சரியா?

நிருபர்: உங்க மனைவிகிட்டே உங்களுக்குப் பிடிச்ச விஷயம் எது?
அரசியல்வாதி: என்ன சண்டை வந்தாலும் கோபம் இருந்தாலும் என்ர சமையல்ல மட்டும் குறையே சொல்ல மாட்டா.....!

### என் சொந்த இயேசு



இசை பாடும் காற்றே என்
இனிமை யேசுவே
ஓசை மிக்க கடலே - என்
ஆசை இயேசுவே
சின்ன சின்ன மழைத் துளியே
என் சிரிப்பு யேசுவே
என்னைப் பிரியாத இயற்கையே
என் அழகு இயேசுவே
மணம் வீசும் மலரே என்
சுவாசம் யேசுவே
மலிவான அன்பே என்
சொந்த யேசுவே
உறவின் உளியே என்
சொந்த யேசுவே

ம. சுகிர்தா, தரம் 8, பேசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது கத்தோலிக்க பாடசாலைகளும் நாமும் பெற்றோர் கவனிக்க வேண்டிய விடயங்கள் !

பிள்ளையைப் பெற்றுவிட்டால் போதுமா, பேணி வளர்க்க வேண்டும் தெரியுமா? என்று கவிஞர் சுரதா அன்று பாடி வைத்தார். பேணி வளர்ப்பதில் பெரும் பணி அவர்களைப் பள்ளியில் சேர்ப்பதில் இருக்கிறது. பணம் படைத்தவர்களுக்கும், வசதியும் செல்வாக்கும் உள்ளவர்களுக்கும் அது பெரிய பிரச்சினையாக இருக்கப்போவதில்லை. அவர்கள் பிள்ளைகளைச் சேர்க்க கல்லூரி முதல்வர்கள் போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள். ஆனால் கீழ்மட்ட, நடுத்தர பெற்றோர்களுக்குத் தம் பிள்ளைகளைத் தராதரமுள்ள பள்ளியில் சேர்த்து விடுவதற்குள் அரை உயிர் போய்விடும். பின்னர் அந்தப் பள்ளி அவர்களிடம் கேட்கும் காரியங்களைக் கொடுத்து முடிக்க மீதி உயிரும் போய்விடும்.

ஒரு காலத்தில் அரச உதவியுடன் கூடிய கத்தோலிக்க பாடசாலைகள் இருந்தன. அப்போது கல்வியின் தராதரம் ஓரளவு எல்லா பள்ளிகளிலும் உயர்வாகவே இருந்ததால் பிரச்சினை இல்லாமல் பக்கத்தில் உள்ள அரச உதவி பெறும் கத்தோலிக்கப் பாடசாலையில் சேர்த்து வந்தார்கள். ஆனால் தற்போது அவை அரச மயமாக்கப்பட்ட பின் அவற்றின் தராதரத்தை அவ்வளவு உயர்வாகச் சொல்ல முடியாது. அவைகளின் கல்வித் தரத்தைக் குறைசொல்ல முடியாவிட்டாலும்கூட, கத்தோலிக்க பின்னணியும். ஒழுங்கு மற்றம் கட்டுப்பாடு காரணமாகவேனும் தனியார் கத்தோலிக்க பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்த்து விடல் அவசியமாகின்றது.

பொதுவாகக் கத்தோலிக்கப் பாடசாலைகளின் தரம் உயர்வாக இருப்பதால் பிற மதத்தினரும் தம் பிள்ளைகளை அப்பாடசாலைகளில் சேர்க்க முயல்கிறார்கள். சில வேளைகளில் அந்த பிறமதப் பெற்றோர் அக்கத்தோலிக்கப் பாடசாலையில் படித்தவராயிருக்கக்கூடும். தாம் பெற்ற சிறப்பான கல்விச் செல்வத்தைத் தம் பிள்ளைகளும் அதே பாடசாலையில் பெறவேண்டும் என அவர்கள் விரும்புவது இயல்பே. மேலும் சில பிறமதப் பெற்றோர் தாம் பெறாத கல்வியைத் தம் பிள்ளைகளாவது பெற்றிட விரும்புகின்றனர். இதற்காக அவர்கள் பெரும் பணம் செலவளிக்கவும் தயாராயிருக்கின்றனர். கல்லூரி அபிவிருத்திக்கென பெரும் நன்கொடைகள் தருகின்றனர். இதைப் பார்க்கும் வறிய கத்தோலிக்க மக்கள் பெரும் கோபம் கொள்கின்றனர். நாங்கள் இத்தனை தலைமுறையாகக் கத்தோலிக்கர்களாக இருந்தும்கூட அதிபராயிருக்கும் அருட்தந்தையோ,சங்கைக்குரிய அருட்சகோதரரோ, அருட்சகோதரியோ பணம் வாங்கிக்கொண்டு பிறமதத்தினருக்கு சார்பாக நடந்து கொள்கிறார் என குற்றம் சாட்டுவார்கள். சில வேளைகளில் அவர்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கும். வேறு சில வேளைகளில் நம் கத்தோலிக்கப் பெற்றோர் தம் பிள்ளைகளின் கல்வி நிலையங்களுக்கு எவ்விதத்திலும் உதவி செய்வதே இல்லை. நாம் கத்தோலிக்கர்கள்தானே, நிறுவனமும் நமதுதானே என்று பேசாமல் இருந்து விடுவார்கள். தம்மால் இயன்றாலும் பள்ளி கட்டிட நிதிக்கோ இதர தேவைகளுக்கோ உதவாத பெற்றோரும் இருக்கவே இருக்கிறார்கள்.



பாடசாலை 1960ம் ஆண்டு அரசாங்கம் பொறுப்பேற்றபோது கத்தோலிக்கர்கள் எல்லாரும் அதை எதிர்த்துத் திரண்டார்கள். பாடசாலைகளின் உள்ளேயே அமர்ந்திருந்து சத்தியாக்கிரகம் செய்தார்கள். இப்பாடசாலைகள் எமது பாரம்பரிய சொத்து. இவற்றை நாம் அரசாங்கத்திற்குத் தாரை வார்க்க மாட்டோம் என மிகவும் கடுமையாக போராட்டம் நடத்தினார்கள். உயர் வகுப்பு மாணவ, மாணவிகள் எல்லாரும் பெரும் கூட்டம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். பிரதமர் வீடு வரை ஊர்வலம் போனார்கள். ஆனால் அரசு விட்டுக்கொடுக்கவில்லை. இரும்புக்கோல் கொண்டு சட்டத்தை அமுலாக்கினார்கள். கடைசியில் பம்பாய் பேராயர் கருதினால் கிராசியாஸ் அவர்கள் இலங்கை வந்து ஆயர் பேரவைக்கு சில உறுதிமொழிகளைக் கொடுத்தார். நமக்கு மிக சாதகமாக அவை அமையாவிட்டாலும், ஒரு மோசமான சூழ்நிலையில் ஓரளவிற்காவது நமது பாதிப்புக்களைச் சமாளிக்க அது உதவியது. முழுமையாகவே தனியார் பாடசாலைகளாக இயங்க சில பாடசாலைகளை நாம் வைத்துக்கொண்டோம்.

காலப்போக்கில் இப் பாடசாலைகளை நடத்துவது மிகப் பெரிய காரியமாகப் போய்விட்டது. பாடசாலை மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்ற நிபந்தனை இரு[illegible]ால் பாடசாலைகளை நிருவகிக்க திருச்சபை மிகப் பாடுபட்டது. பல தனியார் பாடசாலைகளில் கார்னிவேல், பரிசுச் சீட்டிழுப்பு என நிதி சேகரிப்புக்கள் பாடசாலை நிருவாக நட்டத்திற்கு ஈடுகொடுத்தன, ஆலயத்துக்குச் சொந்தமான சொத்துக்கள் பல விற்கப்பட்டன. கடைசியில் சோர்ந்து போய் எந்தப் பாடசாலைகளுக்காக நாம் போராடினோமே அவற்றில் சில பாடசாலைகளைக் கையேற்கும்படி நாமே அரசிடம் மன்றாட வேண்டியதாகிவிட்டது. இடையில் அரசு மாற்றம் ஒன்று நிகழவே, புதிய அரசு இப்பாடசாலைகளைப் பாரமரிக்க மானியம் கொடுக்க முன்வந்தது. ஏதோ தலை தப்பினது தம்பிரான் புண்ணியமாகிவிட்டது. இப்போது அரசினருக்குப் பாடசாலைகள் பெரும் பாரமாகிப் போய்விட்டது. பெரும் பற்றாக்குறை வரவு செலவுகளுக்கிடையே பாடசாலைகளை மீண்டும் முழுமையாகவே நாம் பெறப்பேற்கும் காலம் வந்தாலும் வரலாம். ஏற்கெனவே ஆங்கில மொழியில் பாடம் சொல்லிக்கொடுக்க அனுமதி வழங்கி இருக்கிறார்கள். அதுபோல நம் சுவாமிமார்களிடம், கன்னியரிடமும்கூட பாடசாலைகளை எடுத்து நடத்தும்படி அரசு கேட்டாலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

போதாக்குறைக்கு இப்போது நம் மத்தியில் ஒரு புதிய கல்லூரி கலாச்சாரம் ஒன்று தலைதூக்கியுள்ளது. அது சர்தேச பாடசாலைக் கலாச்சாரம். வசதியுள்ளவர்கள் தம் பிள்ளைகளை சர்வதேச பாடசாலைகளுக்கு அனுப்புகிறார்கள். நல்லது. காசு உள்ளவர்கள் கையிலிருந்து காசு வெளியே வருவது பாராட்டத்தக்கது. இல்லாவிட்டால் காசு குட்டி போட்டு காசு பெருகும். ஆனால் ஒரு சாதாரண மனிதன் அந்தளவு பெரும் பணம் செலவளித்து போதிய பலன் வருகிறதா என அவதானிக்க வேண்டும். சர்வதேச பாடசாலைகள் பலவற்றில் மாணவர் ஒழுக்கம் பற்றி நாம் கொஞ்சம் அவதானமாயிருக்கிறதே நல்லது. சர்வதேச ஒழுக்கத்தைப் பற்றியோ பண்பாட்டைப்பற்றியோ நாம் சொல்லி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியதில்லை.

கத்தோலிக்க பாடசாலைகளை நாம் இழப்பதற்கான காரணம் பெற்றோர்களின் செயல்களே. பெரிய பாடசாலை மோகத்தால் தம் பிள்ளைகளை அவர்கள் சிறிய பாடசாலைகளிலிருந்து விலக்கிக் கொண்டு போகின்றார்கள். பெரிய பாடசாலையை எடுத்துக்கொண்டீர்கள் என்றால் அதில் படிக்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் பல்வேறு தொழில் துறைகளில் பெரியவர்களாயிருப்பார்கள். பள்ளியின் வளர்ச்சிக்காக உதவக்கூடியவர்களாயிருப்பார்கள். அது போல சிறிய பாடசாலைப் பெற்றோர்களைப் பாருங்கள் அவர்கள் எல்லாரும் ஏழைகளாயிருப்பர். எனவே பாடசாலை தரமுயர அவர்களிடமிருந்து உதவி கிடைக்காது.

வசதி வாய்ந்த கத்தோலிக்க பெற்றோர் தம் பிள்ளைகளைப் பெரிய பாடசாலைக்கு மாற்ற சிறிய பாடசாலைகளின் பிறமத பிள்ளைகள் விகிதாசாரம் தானாக உயர அவை நம்மிடமிருந்து பறிபோய்விடுகின்றன. பின்னர் ஐயோ நம் பாடசாலை நம்மிடமிருந்து போய்விட்டது என அலறுவதில் அர்த்தமில்லை. எப்படியோ உங்கள் பிள்ளைகளின் படிப்பை நல்ல கத்தோலிக்க சூழ்நிலையில் பெற்றுக் கொள்ளவும் அதே வேளையில் கல்வியின் தராதரம் குறையாத முறையிலும் பெற்றுக் கொடுக்கும் கடமை உங்களதே என்பதை பெற்றோரே மறவாதீர்கள்.



## வாழ்வு தரும் வார்த்தை

# ஆண்டவரின் அன்பு தனியன்பு

அருள் பணியாளர் நேசன்



### தாயன்பை விட - மேலான அன்பு

களைப்பின் மிகுதியால் ஒரு தாய் தன் குழந்தையின் அருகில் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளது வீட்டை அடுத்துச் செல்லும் நெடுஞ்சாலையில் பலத்த இரைச்சலுடனும் அதிர்ச்சியுடனும் வாகனங்கள் சென்று கொண்டிருந்தன. என்றாலும் அவள் விழித்தெழவில்லை - வீட்டின் மறுபக்கத்தில் செல்லும் புகைவண்டியின் இரைச்சலிலும் அவள் அயர்ந்து தூங்கினாள். அடுத்த சில மணி நேரம் மழை சோ வென்று கொட்டியது. பக்கத்து வீடு பலத்த மழையினால் புயலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பெரும் சத்தத்துடன் இடிந்து விழுந்தது. அந்த இரைச்சலிலும் அவள் அசையவில்லை. இடியும் மின்னலும் தொடர்ந்து முழங்கின. இருப்பினும் அவள் நிம்மதியாகத் தூங்கினாள். ஆனால் அருகில் படுத்திருந்த குழந்தை சிறிது நெளிந்து மென்மையான குரலில் அம்மா எனச் சொல்லி அழ ஆரம்பித்தது. உடனே தாய் விழித்துக்கொண்டாள். தாயின் கரம் குழந்தையை அணைத்துக்கொண்டது. தாயன்பு தனியன்புதான். ஆனால் இறையன்பு இதைவிடச் சிறந்தது என ஆண்டவரே கூறுகிறார். "பால் குடிக்கும் தன் மகவை தாய் மறப்பாளோ ? கருத்தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன்." (இசையாஸ் 49: 15) இந்த உண்மையை நமது வாழ்க்கையில் அறிவு ரீதியாக அல்ல அனுபவ ரீதியாக உணர்ந்திருக்கிறோமா? நமது அன்னையைவிட நம்மை அதிகம் அன்பு செய்பவர் நம் ஆண்டவர். எவ்வளவு ஆறுதல் தரும் அன்பின் வார்த்தைகள் இவை!

"உடல் பலமில்லாமல் இருக்கிறானே!"

ஒரு இளைஞன் தினமும் குடித்து விட்டு இரவில் நெடுநேரம் கழிந்து வீடு திரும்புவான். திரும்பி வந்ததும் தன் தாயிடம் ஏதாவது காரணத்தைக் காட்டி சண்டை போட்டு தாய் என்றும் பாராமல் அடிக்கவும் உதைக்கவும் செய்வான். ஆனால் அந்தத் தாய் அனைத்தையும் பொறுமையுடன் தாங்கிக் கொண்டாள். ஆனால் ஒரு நாள் சண்டை போட்டு தன் தாயை அடித்தபோது அந்தத் தாய் வழக்கத்திற்கு மாறாக சப்தமிட்டு புலம்பி அழுதாள். அவளது மகன் ஆச்சரியப்பட்டான். வழக்கமாக இதைவிட ஓங்கி அடித்தாலும் அழமாட்டாள். இன்று ஏன் அழுகிறாள் என்று காரணம் அறியாது தன் தாயிடம் கேட்டான். அதற்கு அந்தத் தாய் சொல்வாள் "வழக்கமாக நீ என்னை அடிக்கும்போது உன் கரங்கள் இரும்பு போல் இருக்கும்.. அப்பொழுது என் மகன் எவ்வளவு திடமாய் இருக்கிறான் என்று எண்ணி உள்ளத்தில் ஓரளவு மகிழ்ந்து பெருமிதம் அடைவேன். ஆனால் இன்று நீ அடிக்கும்போது சொத் சொத் என்று பலமில்லாமல் அடி விழுந்தது. இதனால் ஐயோ என் மகன் குடித்து கும்மாளம் போட்டு உடல் பலமில்லாமல் இருக்கின்றானே என்று நினைத்துத்தான் அழுதேன்" என்றாள்.



"…..கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார்' (எபேசி 2 : 4). அவரின் அன்பு அளவில்லாதது. அணைகடந்தது. இந்த அன்பை நம்வாழ்வில் அனுபவிக்கின்றோமா?

### தந்தை அன்பைவிட மேலான அன்பு

ஆங்கிலச் சிறுபாடல்களில் பட்மோப் (country performance) எழுதிய பொம்மைகள் (Toys)என்ற பாடல் ஒன்று உண்டு. தன் மகன் ஏழாம் முறையாகக் கீழ்ப்படியாமையால் அவனை நன்கு அடித்து விட்டார் தந்தை. சிறுவன் தூங்கச் செல்லுமுன் வழக்கமாய்க் கொடுக்கும் அன்பு முத்தத்தை அன்று மகனுக்கு அளிக்கவில்லை. கோபத்தோடு விரட்டி விட்டார். ஒரு மணிநேரம் சென்றது. தாயில்லாச் சிறுவனிடம் மிகக் கடுமையாக நடந்து கொண்டதற்காக வருந்திய தந்தை மகனைக் காணச் சென்றார். சிறுவன் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான். தலையணை அருகே அவன் வழக்கமாய் விளையாடும் பொம்மைகள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பொம்மைகளில் ஆறுதல் அடைந்து அவன் நித்திரை செய்திருக்க வேண்டும். சிறுவனின் இமைகளில் கண்ணீர் இன்னும் தேங்கியிருந்தது. தந்தையின் உள்ளம் உருகுகின்றது. கண்கள் கலங்கின ... ... குனிந்து சிறுவனுக்கு முத்தம் அளித்தார்.

இறைவன் முன்னிலையில் நாம் அனைவரும் குழந்தைகளே. ஒரு தந்தையின் அன்பைவிட ஆண்டவர் எம்மை அதிகம் அன்பு செய்கிறார்.

மிளகாயின் இயல்பு உறைப்பு, சீனியின் இயல்பு இனிப்பு. - இறைவனது இயல்பு இரக்கமும் அன்பும் ஆகும். "கடவுள் அன்பாய் இருக்கிறார்" (1 அரு. 4: 16) என்று இரத்தினச் சுருக்கமாக எழுதுகிறார் புனித யோவான்.

பாவத்தால் நாம் இறைவனை விட்டு ஓட முயன்றாலும் அவர் நம் நிழல்போல் நம்மை விடாமல் தொடர்ந்து அன்பு செய்கின்றார்.

"எனது அப்பாவே இக் கப்பலின் மாலுமி"

கடலில் பெரிய கப்பல் பயணமாகிறது. திடீரென ஒரு பெரிய பனிப்பாறையில் கப்பல் மோதப் போகின்ற நிலை! பயணிகளிடையே பரபரப்பு - சலசலப்பு கீழ்த்தட்டில் ஒரு சிறு பையன் எந்த விதக் கவலையுமின்றி விளையாடிக் கொண்டிருந்தான். "கப்பல் ஆபத்தில் சிக்கப் போகிறதே உனக்குப் பயம் இல்லையா" என்று அவனிடம் சிலர் கேட்டார்கள் - அதற்கு அவன் பதில் சொன்னான். இந்தக் கப்பலை ஓட்டுபவர் என் அப்பா. அவர் மாலுமியாக இருக்கும்போது நான் ஏன் பயப்பட வேண்டும். அவர் எவ்வாறு திறமையுள்ளவர் என்று எனக்குத் தெரியும். நிச்சயமாக இக்கப்பலை ஆபத்தில் இருந்து காப்பாற்றிச் செல்வார் என்பது எனக்குத் தெரியும் என்றான் .

"நீரே என் தந்தை, என் இறைவன், என் மீட்பின் பாறை." (தி. பா. 89:26) என இறைவனின் தந்தைக்குரிய அன்பை உணர்ந்து உருகுகிறார் திருப்பாடலின் ஆசிரியர்.

"துன்ப வேலையில் என்னைக் கூப்பிடுங்கள் உங்களைக் காத்திடுவேன் . அப்போது நீங்கள் என்னை மேன்மைப் படுத்துவீர்கள்" (தி.பா.50: 15)

நம்மை படைத்த ஆண்டவர் நம்மை அன்பு செய்கிறார். அவரின் அன்பு எல்லையற்றது. நமது துன்ப வேளையில் இயலாமையயில் அவரது அன்பை தேடி நாடி சரணடைவோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னா சிறுகதை
# பெரிய மனுசன்



மரியதாசின் மனைவி பிரசவ வலியைத் தாங்க முடியாமல் கத்துவது அந்த நடு இரவில் ஊரெங்கும் எதிரொலித்தது. பக்கத்து வீட்டு மிக்கேல் ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தார். மரியதாஸ் கையைப் பிசைந்து கொண்டு அவன் வீட்டு முற்றத்தில் நின்று கொண்டிருந்தான். அவன் வீட்டிற்குள் இரண்டு மூன்று பெண்கள் நிற்பதையும் மிக்கேல் கவனித்தார். என்னவோ நினைத்தார் போல தட தடவென மாடிப்படி வழியாகக் கீழே இறங்கி வராந்தாவில் நின்று கொண்டிருந்த காருக்கு அருகே வந்தார்.

“என்னங்க, மரியதாசிற்கு உதவியா அவன் பொண்டாட்டியை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப் போறீகளா?” என்று கேட்டபடி அவரது மனைவி அன்னம்மா அங்கே வந்தார்.

“ போடி, எனக்கு வேற வேலையில்லையா? ஒண்ணுமில்லாதவங்கட பொண்டாட்டிகளை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகவா கார் வாங்கியிருக்கேன்? என்ர கவுரவம் என்னாகிறது?” என்று சொல்லிக்கொண்டே காரின் முன்சக்கரம் ஒன்றின் காற்றைத் திறந்து விட்டார். மிக்கேல் மாடிக்குப்போன சில நிமிடங்களில் மரியதாஸ் வந்து மிக்கேல் வீட்டுக் கதவைத் தட்டினான். மிக்கேல்தான் வந்து கதவைத் திறந்தார்.

“ என்ன மரியதாஸ் இந்த நேரத்தில வந்து கதவைத் தட்டுறே?” என்று ஒன்றும் தெரியாதவரைப்போல அவனைக் கேட்டார். “ஐயா, என் மனைவி பிரசவ வேதனையால துடிக்கிறா, அவளை உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணும். பக்கத்தில ஆட்டோ டாக்சி எதுவும் இல்லை” மிக்கேல் “ அடடே, இந்த நேரத்தில பார்த்து இந்த சனியன் புடிச்ச காருக்கு காத்து போயிற்றே.... உனக்கு உதவி செய்ய முடியாமப் போச்சே” என்று நீலிக் கண்ணீர் வடித்தார் மிக்கேல்.

காற்று இறங்கிப்போன டயரை கவலையுடன் பார்த்து விட்டு வீட்டுக்கு வந்தான் மரியதா[illegible]. அவனது மனைவியின் வேதனைக்குரல் வர வர அதிகமாகியது. பிரசவத்திற்கான அறிகுறி தெரிந்தது. அங்கிருந்த தங்கம்மா பாட்டி, உதவிக்கு வந்த ஆண்களை வெளியே போகச் சொன்னாள். கொ[illegible] கிடந்த ஒரு புடவையை உருவி மறைப்புக்கட்டினாள். [illegible] நேரத்தில், பிறந்த குழந்தையின அழுகுரல் கேட்டது. சில நிமிட[illegible]ளில் தங்கம்மா பாட்டி குழந்தையைக் கையில் ஏந்தியபடி வெளியே வந்தாள். திண்ணையில் முழங்காலுக்குள் தலை[illegible]ப் புதைத்து கொண்டிருந்த மரியதாஸ் துள்ளி எழுந்தான்.

“ மரியதாஸ், உனக்கு பெண் குழந்தை பிறந்திருக்குப்பா.... ஆனா, உன் பொண்டாட்டியைக்காப்பத்த முடியலை....... அவளை விழுங்கிப்புட்டுத்தான் உன் மக பிறந்திருக்காப்பா” என்றாள் தங்கம்மா பாட்டி. மரியதாசின் அழுகுரல் ஊரெங்கும் எதிரொலித்தது. நடைபிணமான மரியதாஸ் தங்கம்மாப் பாட்டியின் உதவியுடன் பசும்பால் ஊற்றித் தன் பெண் குழந்தையை வளர்த்தான். மாதங்கள் இரண்டு ஓடிவிட்டன.

மிக்கேலின் வீடு அன்று ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு என்ன விஷேசமென்று மரியதாஸ் விசாரித்தான்.

மிக்கேலின் மகன் வெளிநாட்டில் மேற்படிப்பை முடித்து விட்டு இன்று வீடு திரும்புவதாகச் சிலர் சொன்னார்கள்.

நாதஸ்வர மேளத்துடன் உறவினர் கூட்டம் காத்திருந்தது . மிக்கேல் பட்டு வேட்டி சட்டையுடன் கம்பீரமாக நின்றார்.

அரைமணி நேரத்திற்குப்பின் ஆம்பியூலன்ஸ் வண்டி ஒன்று வளவினுள் நுழைந்தது. வீடே அல்லோலப்பட்டது.

மரியதாஸ் மிக்கேலின் வீட்டுக்கு ஓடி வந்து என்ன நடந்ததென்று விசாரித்தான்.

மிக்கேலின் மகனை வீட்டுக்கு ஏற்றிவரச்சென்ற கார் விபத்துக்குள்ளாகிவிட்டதாம்! மிக்கேலின் மனைவி அந்த இடத்திலேயே இறந்துவிட்டாராம்.

அவரது மகன் கடுமையாகக் காயப்பட்டு மருத்துவ மனையிலே அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறானாம். வெளியே குதித்துத்தப்பிய டிரைவருக்கு லேசான காயம். முதலுதவி செய்து அவனை ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பி விட்டார்களாம். மிக்கேல் தலையிலடித்துக்கொண்டு தரையில் விழுந்து உருண்டு புரண்டு அழுதார்.

“என் மகனுக்கு என்ன ஆச்சுப்பா?” என்று மருத்துமனை ஊழியரைக் கேட்டார்.

“சேர் அவருக்கு அதிகமான இரத்தம் வெளியேறியிருக்கு. இன்னும் 12 மணி நேரத்துக்குள்ள தேவையான ஓ பொஸிட்டிவ் இரத்தம் கிடைத்தாக வேண்டும். அப்படிகிடைக்காட்டி அவர் பிழைக்க முடியாதாம்” என்றார் மருத்துவமனை ஊழியர்.

“ஐயோ, கடவுளே எனக்கு யாராவது உதவி செய்யுங்களேன்.....ஓ பாஸிட்டிவ் இரத்தத்துக்கு உடனே எங்கே போவேன்?” என்று அழுதார் மிக்கேல்

ஆம்புலன்ஸ் மிக்கேலையும், மரியதாசையும் ஏற்றிக்கொண்டு மருத்துவனைக்கு விரைந்தது. மிக்கேலின் இரத்தம் தேவைப்படவில்லை. ஆனால் மரியதாஸ் இரத்தம் ஓ பாஸிட்டிவ் ஆக இருந்தது. அவனது இரத்தம் செலுத்தப்பட்டதால் மிக்கேலின் மகனது உயிரைக் காப்பாற்ற முடிந்தது. மிக்கேல் மரியதாசின் கைகளை பிடித்துக்கொண்டு, “மரியதாஸ் உண்மையில் நீதான் பெரிய மனுசன். அன்னிக்கு நான் மனுசனா நடந்துகிட்டிருந்தா உன் மனைவி உயிரைக் காப்பாத்தியிருக்கலாம். ஆனால், நீ இன்னிக்கு தெய்வமாக நடந்து என்மகன் உயிரைக் காப்பாத்திட்டே. இதுக்கு விலையா என் மனைவி உயிரைக் கடவுள் எடுத்துக்கிட்டார். வாழ்க்கையில் இன்னிக்கு நல்ல பாடம் கத்துக்கிட்டேன்” என்று கண்ணீருடன் பேசினார் மிக்கேல்.

# பங்குச்செய்திகள்

## வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்திருவிழா

வங்கக்கடல் அலைமோசம். வங்காலைப் பதியில் புனித ஆனாள் திருவிழா 12ம் திகதி கொடியேற்றத்துடன் பாண்ட் வாத்திய இசையுடன் ஆரம்பமாகியது. அமலமரித்தியாகிகள் மறைபோதகர் அருட்திரு ஜெறோம் லெம்பேட் அவர்களின் அதிரடி மறைக் கருத்துக்களால் நவநாட்கள் அலங்கரிக்கப்பட்டன. 25ம் திகதி மாலை இடம் பெற்ற வேஸ்பர் ஆராதனைகளில் அயல் கிராமங்களிலும் அயல் மாவட்டங்களிலும் இருந்து பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் பக்திப் பரவசத்துடன் பங்கு கொண்டமையை காணக்கூடியதாக இருந்தது .

எமது ஆலயத்துக்கென்றே இவ்வருடம் புதிதாக வடிவமைக்கப்பட்ட ஊர்தியில் நற்கருணை நாதர் பவனி வந்த காட்சி உள்ளத்தை உருக்குவதாக இருந்தது. இப்பவனியில் அதிகமான அருட்பணியாளர்களும் அருட் சகோதரர்களும் அருட்சகோதரிகளும் கலந்து சிறப்பித்தார்கள். திருவிழா தினமான 26ம் திகதி மன்னார் ஆயர் அதிவண இராயப்பு யோசப் அவர்களின் தலைமையில் கூட்டுத்திருப்பலி இடம் பெற்றது. ஆயர் உட்பட 20க்கு மேற்பட்ட குருக்களும் 30க்கு மேற்பட்ட கன்னியர்களும் மன்னார் அரச அதிபர் உயர் அதிகாரிகள் புடைசூழ ஆனாள் அன்னையின் திருச்சுரூப ஊர்தி பவனி வந்தது. பவனியின் போது பக்தர்களின் கண்கள் குணமாகிய காட்சியை உணரக்கூடியதாக இருந்தது .

எஸ். சூசை நாயகம் றெவல்,
ஆலய மேய்ப்பு பணிச்சபை உறுப்பினர், வங்காலை-9

## வங்காலையில் குலாஸ் அடிகளாரின் பொன்விழா திருப்பலி

கடந்த 05. 08. 2001 அன்று வங்காலை மண் விழாக்கோலம் பூண்டது. தனது குருத்துவ வாழ்வில் 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த வங்காலை மண்ணின் முதல் குரு பிரான்சிஸ் குலாஸ் அடிகளாரின் தங்க விழா நன்றித் திருப்பலியில் பங்கெடுக்க வங்காலை மண்ணின் குருக்கள் துறவியரும் இன்னும் இலங்கையின் பல்வேறு இடங்களில் இருந்தும் வந்திருந்தனர். நன்றித் திருப்பலியில் பங்கெடுக்க மன்னார் ஆயர் அவர்களும் அவரோடு இணைந்து யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அவர்களும் மன்னார் குருமுதல்வர் அவர்களும் அமதிகளின் யாழ் மாகாண முதல்வர் ஜீவா போல் அடிகளாரும் பங்கெடுத்தனர்.

திருப்பலியின் முடிவில் அடிகளாரின் பணியை பற்றிய விரிவான உரைகள் நிகழ்த்தப்பட்டன. பின்னர் அடிகளாரின் தங்க விழா புபிலியை ஒட்டிய ஓர் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. பின்னர் பல கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

## தலைமன்னார் பங்கில் உறுதிப்பூசுதல் அருட்சாதன விழா

தலைமன்னார் பங்கில் 70 பிள்ளைகளுக்கு உறுதிப்புசதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது மன்னார் ஆயர் அவர்கள் இவ் அருட்சாதனத்தை வழங்கினார்.

## முருங்கனில் அருட்சகோதரி எலிசபெத்தின் வெள்ளி விழா

கடந்த 25.8. 2001 அன்று முருங்கனில் அருட்சகோதரி எலிசபெத்தின் வெள்ளி விழா நன்றித் திருப்பலி இடம்பெற்றது. இத்திருப்பலியை அருள் பணியாளர் அன்பு றாஜா அடிகளார் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். அமதிகளின் யாழ் மாகாண முதல்வர் ஜீவா போல் அடிகளாரும் யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் செல்வராஜா அடிகளாரும் மற்றும் பல குருக்கள் துறவியரும் இறைமக்களும் இத்திருப்பலியில் கலந்து கொண்டனர்.

## கீளியன் குடியிருப்பு பங்கில் முப்பெரும் விழா

கீளியன் குடியிருப்பு பங்கில் கடந்த 09. 09. 2001 அன்று முப்பெரும் விழா இடம்பெற்றது. உறுதிப்பூசுதல் அருட்சாதன விழா, பங்கு ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு நிறைவு விழா, புதிய பங்குமனை திறப்பு விழா ஆகிய முப்பெரும் விழாக்கள் இடம்பெற்றன. மன்னார் ஆயர் அவர்கள் இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். பல குருக்கள் துறவியர் இறைமக்கள் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

## ப[illegible]விரிச்சானில் தை[illegible]மத்துவ பாசறை

பெரிய பண்டிவிரிச்சான் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் உயர்தர மாணவர்களுக்கு த[illegible]மைத்துவம் பற்றி இருநாள் கருத்தமர்வுகள் இடம்பெற்றன. முதல்[illegible]ாள் (13-07-01) நிகழ்வுகள் மாலை நான்கு மணியளவில் ஆரம்பமாகியது. இதில் எமது பங்குத்தந்தையான மாக்கஸ் அடிகளாரும், கல்வி வலய ஆங்கில ஆசிரியர் மரியநாயகம் குரூஸ் அவர்களும் கலந்து கொண்டனர். முதல் நாள் அமர்வானது சுயமதிப்பு என்ற தலைப்பில் இடம்பெற்றது. இவற்றில் தன் எண்ணம் தன்னம்பிக்கை என்பவையும் முன்னெடுக்கப்பட்டு சிறு விளையாட்டுடன் அன்றய நாள் நிகழ்வு முடிவுற்றது. இரண்டாம் நாள் நிகழ்வின்போது தேவைகள், வருந்துதல் உணவுர்கள் என்பன பற்றி உரைகள் நடந்தன. பின் சிறு சிறு குழுக்களாக பட்டறைகள் நடந்தன. அன்றைய நாள் முழுவதும் பாடசாலையிலேயே களித்தனர். மூன்றாம் நாள் நிகழ்வாக ஆளுமை என்ற தலைப்பினூடாக உரைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளை அருட் பணி. றெஜினோல்ட் மற்றும் அவருடன் சேர்ந்த உளவளத் துணையாளர்கள் நடாத்தினார்கள். இதில் 65க்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்றனர்.

கிறிஸ்ரினா லெம்பேட், கலைப்பிரிவு, பெ.பண்டிவிரிச்சான் ம.வி.

## பள்ளிமுனையில் திருகுடும்ப அங்கத்தவரின் அர்ப்பணிப்பு

அழகான வண்ண வண்ண மலர்கள் அனைத்தும் இறைவனின் பீடத்தை அலங்கரிப்பது போல பலவகையான பட்சிகள் மரக்கிளையிலே இருந்து இன்னிசை எழுப்பி பாடி மகிழ்ச்சியாக இருப்பது .போல திருமுழுக்கின் மூலமாக அழைக்கப்பட்ட இறைவனின் பிள்ளைகளாகிய நாம் அனைவரும் எம்மொழி பேசினாலென்ன எவ்வினத்தைச் சார்ந்தாலென்ன, எல்லோரும் இறை குடும்பத்திற்கு சொந்தமானவர்களாக ஒன்றாக இருப்பதுதான் இறைவனின் திட்டம். நாம் எந்நிலையில் வாழ்ந்தாலும் நலம் பெறுகின்ற அழைப்புக்கள் உண்டு. அவ்வாறான ஓர் சிறந்த விதமான அழைப்புத்தான் திருக்குடும்ப துணை அங்கத்தவராகும் அழைப்பாகும்.

அவ்வழைப்பின் குரலை இதயத்தில் ஏற்று எமது ஸ்தாபகரின் எண்ணக் கருவில் உருவான நினைவலைகளை நனவாக்க அவர் காட்டிய நற்செய்திப் பாதையில் கவரப்பட்டவர்களாக திருகுடும்ப மனப்போக்கை அனுசரிக்கவும் ஆதிக் கிறிஸ்தவர்களின் சாட்சிய வாழ்வுக்கு உயிருட்டம் கொடுக்கவும் முயற்சி எடுப்போம் என்ற தீர்மானத்துடன் எமது பள்ளிமுனைப் பங்கிலிருந்து இரண்டு குடும்பங்கள் உட்பட ஒன்பது அங்கத்தவர்கள் திருகுடும்ப பொது நிலையினர் துணை அங்கத்தவர்களாக தம்மை அர்ப்பணிக்க உறுதி பூண்டனர். அன்று ஆவணித் திங்கள் 1ம்நாள் அந்தி மயங்கும் மாலை வேளையில் எமது பாதுகாவனியான புனித லூசியா ஆலயத்தில் அங்கத்தவர்க்ள் அர்ப்பணப் பூக்களை அன்புடன் கரங்களில் ஏந்தியவர்களாக இறைமகன் யேசுவின் இறைபலியில் இணைந்திட அருட்தந்தை கெனடி அடிகளாரோடு இணைந்து திருப்பீடத்தை நோக்கி பவனியாக சென்று இறைவனின் தியாகப் பலியில் கலந்து கொண்டனர்.

## அரிப்பில் திருக்குடும்ப பொதுநிலை அங்கத்தவர் அர்ப்பணம்

ஆவணித் திங்கள் 18-20 தினங்கள் எமக்கு ஒரு மகிழ்வான நாள். எம் பங்கின் திருக்குடும்ப அருட்சகோதரிகளின் உடன் செலுத்தலோடு தி. கு. பொதுநிலை அருட்சகோதரி, அலீஸ் முன்னிலையில் எமது அர்ப்பணத்தை செய்து, சபையில் இணைந்து கொண்டோம்.

இவ்விணைப்பு எம்மை நசரேத் திருக்குடும்பத்தின் ஐக்கியம் புண்ணிய வாழ்வு, ஆதிக்கிறிஸ்தவர்களின் பகிர்தல், சகோதர ஒன்றிப்பு, இறைவார்த்தை, நற்கருணை இவற்றை மையமாக வைத்து வாழப்பட வேண்டிய வாழ்வு என வலியுறுத்தப்பட்டது. திருப்பலியின்போது பங்குத் தந்தை யூட் குரூஸ் அடிகளார் திராட்சை செடி கொடியில் நிலைத்திருப்பது போல் எம் அர்பண வாழ்வும் இறைவனில் நிலைத்திருந்து பயன் அளித்தல் வேண்டுமென்ற கருத்துடன் மறை உரை வழங்கி எம்மை ஊக்கிவித்தார். இவ்வற்பணம் எம்மில் ஒரு குடும்ப உறவை தட்டியெழுப்ப சுற்றுலா கொண்டாட்டத்திற்கு அண்மையில் உள்ள கற்கடந்தகுளம் நோக்கி அழைத்துச் சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பொழிவு

## அது எங்கள் பணம்தானே (சிந்தனைக் கதை)



ஆலயப் புனரமைப்புக்காகப் பங்குச் சுவாமியார் ஊக்கத்துடன் ஓடியாடி வேலைசெய்து கொண்டிருந்தார். அதை அறிந்த ஊர் பெரும் பணக்காரர் ஒருவர் இரண்டு லட்ச ரூபா கொடுக்க முன்வந்தார்.
பணக்காரர் ஒரு கிளப் முதலாளி. சாராயம், சூது, குதிரைப் பந்தையம், விபசாரம் முதலியவற்றுக்குப் பெயர் போனது அக் கிளப். இதனால் சுவாமியார் அந்த நன்கொடையை மறுத்து விட்டார். எதற்கும் பங்கு ஆலோசனைச் சபையாரிடம் கேட்டுப் பார்க்கலாம் என்று அடுத்த கூட்டத்தில் இந்த விசயத்தை மெல்ல எழுப்பினார். ஆலோசனைச் சபையினர் ஒரே குரலாகச் சொன்னார்கள். "கட்டாயம் அதை வாங்கிக் கொள்ளுங்கள் சுவாமி. என்ன இருந்தாலும் அது எங்கள் பணம்தானே" என்று.

## சிரிக்கச் சிந்திக்க

வழக்கறிஞர் ஒருவரும் பாப்பரசர் ஒருவரும் ஒரே நாளில் மோட்ச வாசலை அடைய வேண்டியிருந்தது. இராயப்பர் மிகவும் மரியாதையுடன் அவர்களை வரவேற்றார்.
வழக்கறிஞரை அழைத்துக்கொண்டு போய் சகல வசதிகளுடன் கூடிய ஒரு சொகுசு அறையை அவருக்கு வழங்கினார்.
பாப்பரசருக்குக் கிடைத்ததோ மிகவும் எளிமையான ஒரு அறை. அடிப்படை வசதிகள் கூட அங்கு இருக்கவில்லை. வழக்கறிஞருக்கோ தர்ம சங்கடமாகிவிட்டது. உடனே இராயப்பரிடம் அவர் சொன்னார். "ஏதோ தவறு நடந்த விட்டது போலிருக்கிறதே. பாப்பரசருக்குக் கிடைக்க வேண்டிய அறை எனக்குக் கிடைத்துவிட்டதோ தெரியவில்லை" என்றார்.
இராயப்பர் சொன்னார். "இல்லையப்பா. எல்லாம் ஒழுங்காகத்தான் செய்திருக்கிறேன். இவரைப்போல நூற்றக்கணக்கான பாப்பரசர்கள் இங்கே மோட்சத்தில் இருக்கிறார்கள். ஆனால் நீர் ஒருவர்தான் இங்கே முதன்முதலாக வந்திருக்கும் வழக்கறிஞர்"

## நேரம் எடு

சிந்திப்பதற்கு நேரம் எடு
அது ஆற்றல்களின் உறைவிடம்

விளையாட நேரம் எடு
அது இளமையின் இரகசியம்

வாசிக்க நேரம் எடு
அது ஞானத்தின் ஊற்று

செபிக்க நேரம் எடு
அது உலகின் பெரிய சக்தி

அன்பு செய்யவும் அன்பு
செய்யப்படவும் நேரம் எடு
அது இறைவன் உனக்குத்
தந்த கொடை

உறவாட நேரம் எடு
அது மகிழ்வின் பாதை

சிரிக்க நேரம் எடு
அதுவே ஆன்மாவின்
இராகம்

கொடுக்க நேரம் எடு
அது சுயநல நாட்களைக் குறைக்கும்.

சேவை செய்ய
நேரம் எடு
அது வெற்றியின் பரிசு

அயலார்க்கு உதவ
நேரம் எடு
அது விண்ணகத்தின்
திறவு கோல்

செல்வி ம.அகிலா
சோசை
வங்காலை-06
மன்னார்.

## சிந்திக்க சில வினாடி



நம்மிடம் இருக்கும் அனைத்தையும் நாம் இழந்த நிலையில் கடவுள் மட்டுமே நம்மிடம் இருக்கும்போது அவர் எல்லாவற்றிற்கும் போதுமானவராய் இருப்பதை நாம் அறிந்து கொள்வோம். கடவுளை நாம் பார்க்க முடியாதிருந்தாலும் அவருடைய பார்வைக்கு நாம் மறைவானவர்களாய் ஒரு போதும் இருப்பதில்லை. நம்மை எத்தகைய நபராய் மாற்றியமைக்கப் போகிறார் என்பதை கடவுள் ஆரம்பத்திலே அறிந்துள்ளார். நாம் அறிந்திருந்தாலும் அறிந்து உணராவிட்டாலும் நம்முடைய வாழ்நாள் அவர் கரத்திலே உள்ளது. எந்த ஒரு விடயத்திலும் இறுதி வார்த்தையும். செயற்பாடும் கடவுளுடையதே
பெனிற்றா, மறைத் தொண்டர், கள்ளியடி

# கவிதைக் களம்

## சமாதானம்

காத்திருப்பின் மத்தியில்
காலங்கள் கரைகின்றன
அமைதியை விரும்பும் நாட்டினிலே
சமாதானத்தின் வழி தெரியாது
தவிக்கின்றோம்

இனவாதம் எம்மை நசுக்கினாலும்
நீதியற்ற செயல்களும்
அன்பற்ற செயல்களும் ஒழிந்து
சமாதானம் நிலவிட செயல்படுவோம்

சமாதானம் [illegible]டிச் செல்கையிலே
அதைவிட [illegible] நினைவுண்டோ
அதற்காய் [illegible]மையே தயார்செய்து
அதையே நாங்கள் வாழ்ந்திடுவோம்

அமைதியின் புறாக்கள் யுத்தத்திலே
கருகிச் சருகாய் மடிகின்றது
சமாதானம் எம் கையில் வந்துவிட்டால்
அமைதியின் மக்களாய் மலர்ந்திடுவோம்

மு. அன்ரனிற்றா
கற்கடந்தகுளம், முருங்கன்.

## இறைவா வந்திடுவாய்

உலகம் காட்டும் அன்பு பொய்யானது
இறைவன் காட்டும் அன்பு மெய்யானது
பெற்ற தாயும் பொய்யானது
உற்றார் உறவும் பொய்யானது
இறைவன் உறவே மெய்யானது
என்றும் காக்கும் உறவானது

உள்ளத்தில் இறைமை நிறைந்திருக்க
வழிகாட்டும் பாதை தெரிந்திருக்க
புதுமைகள் புவியில் காட்டிடுவாய்
புதிய வழிகள் சமைத்திடுவாய்

உலகில் உண்மை நிறைந்திருக்க
உலகை என்றும் காத்திடுவாய்
ஒளியாய் வந்து நிறைந்திடுவாய்
உலகை என்றும் மாற்றிடுவாய்

நடித்திடும் உலகை மாற்றிடுவாய்
நலமாய் வாழ வைத்திடுவாய்
நெஞ்சிலே இரக்கம் ஊட்டிடுவாய்
நிறைவாய் வாழ முனைந்திடுவாய்.

ச.சவிரியம்மா
நானாட்டான.

## வானில் பறந்த வெண்புறா



திருக்குடும்பத் தலைவி எங்கள் அன்பு அம்மாவே!
நின் பிரிவு நித்தம் எம்மை வாட்டுதம்மா,
உலகெல்லாம் சோதரிகள் நாம் கலங்கி நிற்க,
பரமன் பதம் பறந்து விட்டாய் நாம் - பரிதவிக்கின்றோம்!!

படுக்கையில் நீர் படுக்கையெனக் கேட்டதுமே - அம்மா!
பதை பதைத்துக் காணப் பெரும் ஆவலுமே கொண்டோம்,
மின்னாது, முழங்காது இறைபதமடைந்தீர் - செண்டாக
உம் வருகை பார்த்த நாமும் ஏமாற்றமடைந்தோம்!!

"ஜோய் சிமித்" எனச் சொன்னால் என்றும் - இனிக்குதம்மா!
புன்சிரிப்பும் புதுப் பொலிவும் மலரும் உந்தன் முகத்தினிலே,
இறைபணிவு, குணமளிப்பு செவிமடுப்பு அந்த – முத்துக்கள்,
எழுத்திலே நீர் தந்த மூன்று நல்ல சொற்களம்மா!!

குக்கூ··· எனக் குருவியினம் - சோகக்கானம் மீட்டுதம்மா!
குரல் எழுப்ப முடியாது உன் சமூகம் தவித்ததம்மா,
"யாழகத்தே" நாம் உந்தன் அன்புக்கரம் இழந்தோம் அம்மா,
விண்ணகத்தே வாசம் வீசத் தந்தை அழைப்பு விட்டானம்மா!!

அன்னை உன் இலட்சியங்கள் விசாலமாக விரிந்ததம்மா!
பியன்வெனு தந்தை வழி அணுவணுவாய் நடந்தாயே!
குடும்பமாய் வாழுதல் இயலுமென காட்டினாயே
நன்றி தினம் சாற்றி வாழ்ந்த உன் பெருமை என்னென்போம்!!

அருட்சகோதரி மேரி பொஸ்கோ, பேசாலை

## சமாதானம்

பறக்க விட்ட
சமாதானப் புறாக்கள்
பாதை மாறி சென்று விட்டன
தற்போது இருக்கின்ற
சமாதானப் புறாக்கள்
பாதை தெரியாது
பறக்க மறுக்கின்றன.
ஆனால் இன்றும்
சமாதானப் புறாக்களின்
பண்கள் அழைக்கப்படவில்லை.

டெனி நிமால்
சிறிய குருமடம்
மன்னார்

## அன்பே அருட் கடலே

அன்பே அருட் கடலே - எங்கள்
ஆதி பிதா சோதியரே
இன்ப திருமகளே - அன்னை
ஈடில்லா மாமரியே
உந்தன் புகழ் பாடிடவே - இந்த
ஊரே திரண்டதம்மா
எண்எழுத்தோ யாமறியோம்- அந்த
ஏட்டின் வகை நாம் அறியோம்
ஐயம் தவிர்த்திடவே - இங்கு
ஒற்றுமைக் கொளி தருவாய்
ஔவியம் பேசும் மக்களுக்கு
ஔடதமாய் நீ இருப்பாய்

அ. மரிசால் பிள்ளை ராஜன்
பள்ளங்கோட்டை,
நானாட்டான்.

# வாசகர் எண்ணங்கள்

### பலமுறை படிக்கிறேன்

அருட் தந்தை நேசன் அடிகளாருக்கு! தூய ஆவியின் அருள் இரந்து எழுதுவது! மன்னா பத்திரிகையைப் பெறுவதற்கு 10 ரூபாவைக் கையிலேந்தி ஞாயிறு திருப்பலி முடிவில் ஆலய முன்றலில் விற்பனையாளரை ஆவலுடன் பார்த்திருந்து சில தருணம் ஏமாற்றமடைந்த எனக்கு சென்ற வைகாசி மாதம் தொடக்கம் தபாலில் மன்னா என் இல்லம் தேடி வருவதையிட்டு ஆனந்தம் பேரானந்தம். இதற்கு வழிசெய்த உங்களுக்கு ஆயிரம் நன்றிகள். பதிப்பாசிரியர் பகர்வது என்ற தலைப்பில் வைகாசி மாத இதழில் "அன்றாட வாழ்வில் ஆவியின் அனுபவம்" ஆனிமாத இதழில் "பணிவாழ்வுக்கு அழைப்பு" ஆடிமாத இதழில் "ஆண்டவர் பிரசன்னத்தில் ஆறுதல்" இவை என் வாழ்வுக்கு மெருகூட்டி ஆவியின் ஆற்றலால் உள்ள அமைதி அடையவும் இறைவனுடன் நெருங்கி வாழவும் இறை நம்பிக்கையில் வளரவும் வழிவகுக்கிறது. இக் கட்டுரைகளை ஒருமுறை அல்ல பலமுறை படிக்க ஏவப்படுகின்றேன். சிந்திக்கின்றேன். சுவைத்து இன்புறுகின்றேன். செயற்படுத்த விளைகின்றேன். என்னை அண்டிவரும் இனத்தவர் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். இது போன்ற கட்டுரைகள் தொடர ஆன்மீகத்தில் மக்கள் வளர வளம்பெற ஆவியானவர் உங்களை நிறைவு செய்ய வேண்டுகின்றேன். நன்றி தந்தையே! மன்னா புதுப் பொலிவுடன் வளர்ச்சி பெறுவது கண்டு மகிழ்ச்சி. உங்கள் மகத்தான சேவையைப் பாராட்டுகின்றேன். மன்னாவை மகிழ்வுடன் எதிர்பார்க்கும்

செல்வி . கிளாரா போல் பிள்ளை
இறம்பைக்குளம், வவுனியா

### உன் முகம் பார்க்காத நாள் ஏது?

எம் மன்னார் மறைமாவட்டத்தில் கத்தோலிக்க பத்திரிகையாக திகழ்வது மன்னா ஒன்றே. உன் முகம் பார்க்காத நாள் ஏது மன்னாவே? வருக மன்னாவே வளர்ச்சி தருக! மன்னாவே வா! விரைந்து வா! மன்னாவே நீ எனக்கு நாள் தோறும் மன்னாவை ஊட்டுகிறாய். ஒளியும் வழியும் நீயே! எம் வாழ்வில் வழிகாட்டி நீயே! மன்னாவே வாழ்க வளர்ச்சி தருக! வாழிய! மன்னாவே வாழியவே!

அ. பொபிற்றா தரம் -10
வ. வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம்.

### ஆக்கங்கள் சூப்பர்!

மன்னார் மைந்தன் மன்னா உனக்கு வணக்கம்! நீ சுமந்து வரும அத்தனை ஆக்கங்களும் சூப்பர்! நான் உன் ரசிகன். உன் சேவைக்கு பல கோடி வாழ்த்துக்கள். நான் ஒரு கதையை முதன் முதலாக எழுதுகிறேன். சமூதாயத்தோடு சம்மந்தப்பட்ட கதை. நீ நிச்சயமாக சுமந்து வருவாய் என நம்பிக்கையுடன் எழுதுகிறேன்.

.த.தவறஞ்சன், அச்சங்குளம், நானாட்டான்

### சிந்திக்க வைக்கின்றாய்

அழகிய இதழோடு மணம் வீசும் மன்னாவிற்கு என் உளம் கனிந்த இனிய நல் வாழ்த்துக்கள்! மன்னாரின் மன்னாவே! மாண்பு மிகு ஒளி விளக்கே! மானிடரான மனங்களிலே இருட்டறையை ஒளியறையாய் மாற்றி எம் மனதில் மகிழ்ச்சி தரும் மன்னாவே! உன் வரவை எதிர்பார்க்கும் எம் மனதில் அளவு கடந்த சிந்தனைத் துளிகள்! எம்மை சிந்திக்க வைக்கும் உன் பணி சிறக்க வாழ்த்துகிறோம்! வாழ்க மன்னா வளர்க உன் சேவை!

க. டயானா. தரம் - 10, அரிப்பு, முருங்கன்

### ஆகாயத்தூடே பவனி வரும் மன்னா

தாய்மண்ணும் தாயும் எண்ணும்போதே மகிழ்வு தரும். அதே போல் தாயகத்தின் தரவுகளை, ஆகாயத்தூடே பவனி வந்து எங்களை மகிழ்விக்கும் மன்னாவே நீ பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.
அன்புள்ள தந்தையரே இறை ஆசி உரித்தாகுக ! மன்னா பத்திரிகையும் அதனோடு உங்கள் மடலும் கிடைத்தது. நீங்கள் நன்றி கூறி எழுதியிந்தீர்கள். இதற்கு நாங்கள்தான் உங்களுக்கு மிக மிக நன்றி கூறுகின்றோம். சொந்த நாட்டை விட்டு வெகு தொலைவில் வந்திருக்கும் நாங்கள் எங்கள் மண்ணில் நடைபெறும் செய்திகளை வாசிக்கும்போது ஏதோ நாங்களும் அதை நேரில் பார்த்து கொண்ட சந்தோசத்தை அடைகிறோம். நாங்கள் மன்னார் எழுத்தூர் என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள். எங்கள் ஊர்ச் செய்திகூட மன்னாவில் இடம்பெற்றதைப் பார்க்கும்போது மிகவும் சந்தோசமாக இருந்தது. மேலும் ஏப்ரல் மாத மன்னாவில் ஆசிரியர் ஆசிப்பதைக் காணவில்லை. ஆவலுடன் அடுத்த மாத மன்னாவில் எதிர்பார்ப்பேன். உங்கள் பணி சிறக்க எங்கள் எல்லோரினதும் வாழ்த்துக்கள்.

றொமினா. பாரிஸ், பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அரங்கம்

## அமெரிக்காவின் அடாவடித்தனம் அடங்குமா?

சர்வதேச சண்டைக்காரன் என்று விமர்சிக்கப்பட்ட அமெரிக்காவின் பாதுகாப்பைப் படுகேலிக்குரிய விடயமாக ஆக்கியிருக்கிறது 11.09.2001 அன்று அமெரிக்காவின் பொருளாதார பாதுகாப்பு நிலைகள் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட மயிர்க்கூச்செறியும் தாக்குதல். உறுதி செய்யப்பட்ட சூத்திரதாரி யார் என்பது இதுவரை கண்டறியப்படாவிட்டாலும், அமெரிக்க பாதுகாப்புத் துறைக்கு சிம்மசொப்பனமாக விளங்கும் ஒஸாமா பின் லேடனே அமெரிக்காவாலும், நேசநாடுகளாலும் சந்தேகிக்கப்பட்டிருக்கிறார். அண்மைக்காலமாக இஸ்ரேலியப் படைகளினால் மிலேச்சத்தனமாகப் பலஸ்தீனர்கள் தாக்கப்பட்டுக் கொண்டிருப்பதால்,

பலஸ்தீனத் தீவிரவாதக் குழுக்களும் அமெரிக்கா மீதான தாக்குதலில் பங்கேற்றிருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது. யார் சூத்திரதாரியாக இருந்தாலும், கொசுக்கூட நுழைய முடியாத மிக இறுக்கமான அமெரிக்கப் பாதுகாப்பு வளையத்துக்குள் தற்கொலை விமானங்கள் நுழைந்து வெற்றிகரமாகத் தாக்குதலை மேற்கொண்டிருப்பது மிகப் பெரிய ஆச்சரியமாகவே அமைந்திருக்கிறது. இவ்வளவுதான் அமெரிக்காவின் காதுகாப்பு? என அமெரிக்காவின் எதிரிகள் கைதட்டிச் சிரிக்குமளவுக்கு அமெரிக்க இராணுவ பலம் நகைப்புக்குள்ளாகியிருக்கிறது. பாலஸ்தீன விடுதலை இயக்கங்களையும், பின் லேடனின் தலைமையிலான குழுவையுமே அமெரிக்கா தற்போது சந்தேகிக்கின்றது. இச்செய்தி எழுதப்படும் வரை ஒஸ்மாவைத் தாக்குதலின் சூத்திரதாரி என நிருபிப்பதற்கான சான்றுகள் கண்டறியப்படவில்லை. 1998ம் ஆண்டு அமெரிக்காவில் தற்கொலைத் தாக்குதலை மேற்கொள்ள, ஒஸமா சதித்திட்டங்களை வகுத்தார் என சி.ஐ.எ உளவறிந்து தகவல் வெளியிட்டது. அதன் பின்னர் ஒஸாமாவின் அதிரடி நடவடிக்கைகள் அமெரிக்காவுக்கெதிராக இடம்பெறவில்லை. ஆனால், அமெரிக்காவுக்கெதிரான தாக்குதலை மேற்கொள்ள ஒஸாமாவுக்கு இயலாது என்றும் கூறுமுடியாது. அரபு நாடுகளுக்குள்ளே அமெரிக்காவின் நெருக்கமான உறவு நாடாக செயற்படும் எகிப்தின் ஜனாதிபதி "போக்கிரித்தனமான தாக்குதல்" என இத்தாக்குதலை வர்ணித்துள்ள வேளையில் அங்குள்ள மக்களோ அமெரிக்காவின் அழிவையிட்டு பெருமகிழ்ச்சியடைந்துள்ளார்கள் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. கூடுதலான அரபு நாடுகளிலும் பலஸ்தீனத்திலும், முஸ்லிம்கள் வீதியில் இறங்கி மகிழ்ச்சி ஆரவாரம் செய்திருக்கிறார்கள். பட்டாசு கொளுத்திக் கொண்டாடியிருக்கிறார்கள். ஆனால், இவைகளெல்லாம் நாகரீகமான செயற்பாடுகளல்ல. அமெரிக்காவின் ஆதிக்க வெ... ணமாக உலகின் பல்வேறு நாடுகளிலும் பல்... யிர்கள் பலியாகி இருக்கின்றன. அவை... வன்மையான கண்டனத்துக்கு உரியவைதான். இருந்தும் அமெரிக்கா மீதான தாக்குதலில் பலியானவர்களை எண்ணி மனம் வேதனை கொள்வதைத் தவிர்க்க முடியவில்லை.

என்னதான் கொலை வெறி பிடித்தவனாக இருந்தாலும், ஒரு மனிதனின் இறப்பில் ஆனந்தப்படுவது, சந்தோசம் கொண்டாடுவது மனித நாகரிகத்தைக் கொச்சைப்படுத்துவதாகவே அமையும். அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள அழிவுகளுக்கும் மனித உயிர் இழப்புகளுக்கும் முழுக்காரணம் அமெரிக்காவின் சண்டியன் தனமும், காடைத்தனமுமேயாகும். தன்னுடைய இராணுவ வெறியையும், ஆதிக்க வக்கிரத்தையும் ஏனைய நாடுகள் மீது திணித்தமையினாலேயே அமெரிக்கா இன்று சற்றும் எதிர்பாராத அதிர்ச்சித் தாக்குதலை சந்தித்திருக்கின்றது. தாக்குதல் இடம்பெற்ற மூர்க்கத்தனமும், இஸ்ரேலின் கைபொம்மையாக தொடர்ந்தும் அமெரிக்கா செயற்பட்டு வருவதும் இன்னும் பல எதிர்பாராத தாக்குதல்களை அமெரிக்கா சந்திக்கும் என்பதையே எதிர்வு கூறி நிற்கின்றன.

# பெரியப்பா பதில்கள்

**அன்பின் வாசகர்களே!**
இப்பகுதிக்கு நீங்களும் கேள்விகளை அனுப்பலாம். ஆன்மீகம், அரசியல், விளையாட்டு, சினிமா போன்ற எத்துறை சார்ந்த கேள்விகளையும் அனுப்பலாம். பெரியப்பா உங்களுக்கு பதில் தரக் காத்திருக்கின்றார்.



* நீங்கள் ஜனாதிபதியானால் என்ன செய்வீர்கள்?

வி. மதன், குளியாப்பிட்டி

ஆட்சி செய்வேன்!

* ஆலயத்திற்குச் சென்று வழிபடுவதில் தான் உண்மையான பக்தி அடங்கியுள்ளதா?

அ. அருண்குமார், மன்னார்

இல்லை - எங்கிருந்தும் வழிபடலாம். ஆனால் - பசுவின் இரத்த நாளங்கள் முழுவதும் பால் பரவியிருந்தாலும் காம்பைத் தொட்டுத்தானே பால் கறக்கிறோம்? அதே போல் இறைவன் எங்கும் பரவியிருந்தாலும் அவரை முழுமையாக - சிறப்பாக வழிபட கோயிலுக்குப் போய்த்தான் ஆக வேண்டும்.

* கற்பிழந்த பெண்ணை பழி கூறும் இந்தச் சமுதாயம் அதற்குக் காரணமான ஆணை ஒன்றும் கூறுவதில்லையே ஏன்?

சு. மதிவதனி. செட்டிகுளம்

கற்பிழப்பின் விளைவுகள் பெண்ணிடம்தானே பிரதிபலிக்கின்றன! அதனால் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியவள் அவளே என்பதால் பழியும் அதிகமாக அவள் மேல் விழுகிறது. கற்பு அழிப்பு என்றால் ஆணுக்குத்தானே தண்டனை தரப்படுகின்றது. கற்பு இழப்பு என்றால் பெண்ணே குற்றவாளியாகிறாள்.

* மனிதன் தன் ஆன்மாவுக்கு ஈடாக எதைக் கொடுப்பான்?

ஜெயசீலன். யாழ்ப்பாணம்

ஆன்மாவுக்கு ஈடாகக் கொடுக்க மனிதனிடம் என்ன இருக்கிறது? ஆகவே பலர் ஆன்மாவையே ஈடு வைத்து விட்டு வெறும் சடப்பொருட்களாக அலைகின்றனர்!

* 2005ல் என்ன நடக்கும்?

ச. வசந்த றாணி. நானாட்டான்

இப்போது நடப்பவையெல்லாம் அப்போதும் நடக்கும் (பின்ன பறக்கவா செய்யும்?) ஹி -- ஹி

* கிறிஸ்துவின் வாழ்க்கையில் தங்களைக் கவர்ந்த நிகழ்ச்சி எது?

அந்தோனி முத்து, தலைமன்னார்

ஒரு மரத்தால் மட்டுமே தன்னை உயர்த்திக் கொள்ளும் நிலையிலிருந்த சக்கேயுவை, ஒரு பார்வையால் சில வார்த்தைகளால் எவரெஸ்டில் தூக்கி வைத்த கிறிஸ்துவின் புரட்சிதான் என்னைக் கவர்கிறது.

"இவனும் ஆபிரகாமின் மகன்தானே இழந்து போனதை தேடி மீட்கவே மனுமகன் வந்துள்ளார்" (லூக். 19:9-10)

* திருமணங்கள் நரகத்திலும் நிச்சயிக்கப் படுகிறன என்கிறேன் . உங்கள் கருத்து என்ன?

மெற்றில்டா குருஸ், வத்தளை

என் நண்பருக்கு போன மாதம் கல்யாணம். காதல் கல்யாணம். அவர்கள் இருவரும் முதன் முதலில் சந்தித்துக் காதல் பார்வையைப் பரிமாறிக் கொண்டது எங்கே தெரியுமா?

தேவ அழைத்தல் கண்காட்சியில்!! வாழும் முறை முக்கியம். நிச்சயிக்கப்படும் இடம் முக்கியமல்ல. சேற்றிலே பூப்பதால் தாமரைகள் கறுத்துப் போவதில்லை!

* பாவத்துக்கும் தவறுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?

அருண்குமார், வங்காலை

அறிந்தே செய்யும் தப்பு - பாவம்
அறியாமல் செய்யும் தப்பு- தவறு
தவறுகள் திருத்தப்படலாம்
பாவங்கள் மனனிக்கப்படலாம்!

* வரதட்சணை வாங்கு... மாப்பிள்ளைக்கு ஆலயத்தில் திருமண... டிக்கும்போது பரிகாரமாகத் தலையில் முள் முடி சூட்டினால் என்ன? மற்றவர்களுக்கு ஒரு மாதிரியாக இருக்குமல்லவா?

வசந்த குமார். முள்ளிக்குளம்

அந்த முள்முடியையும் வெள்ளியில் செய்ய வேண்டும் - தங்கத்தில் செய்ய வேண்டும் என்று பெண்வீட்டாரிடம் பேரம் பேசி முள் முடி பஷன் கொண்டு வந்து விடுவார்கள் இன்றைய மாப்பிள்ளைகள்! ஹி--- ஹி----

* சட்டத்தாலும் திருத்த முடியாதது எது?

சுகிர்தன், சாந்தி புரம், மன்னார்.

டாக்டர்களின் கையெழுத்து
ஈழத் தமிழரின் தலையெழுத்து

* நடிகைகள் தங்கள் பெயரை மாற்றிக் கொள்வது ஏன்?

விஜயன், கற்கடந்தகுளம்

செய்யப் போகும் புதிய பாவங்களால் , பழைய சாமி பெயர்கள் களங்கப்பட்டு விடக்கூடாது என்ற நல்லெண்ணமாக இருக்கலாம் ஹி- ஹி- ஹி-

# விடுதலைப்புலிகள் இனப்பிரச்சினையின் காரணர்கள் அல்ல அதன் விளைவுகளே

### பேராசிரியர் செனவிரத்தன

"சிஹல உறுமய சிங்களவர் நலனுக்காகப் போராடுவதாகக் கூறிக்கொள்கிறது. உண்மையாக இவ்வாறு செயற்படல் தவறானதல்ல. ஆனால் தமிழர் நலனுக்காகப் போராடும் உரிமை தமிழ் இளைஞர்கட்கும் உண்டென்பதை இவர்கள் ஏற்கவேண்டும். விடுதலைப் புலிகள் இலங்கை இனப்பிரச்சினையின் காரணர்கள் அல்ல, மாறாக அதன் விளைவுகளே அவர்கள்" இவ்வாறு முன்னாள் இலங்கை பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் நெருங்கிய உறவினரும் அவுஸ்திரேலிய குவின்ஸ் லண்ட் சர்வகலாசாலைப் பேராசிரியருமான கலாநிதி பிறையன் செனிவிரத்தினா அண்மையில் வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கை வரலாற்றில் முதன் முதலில் கூட்டாட்சி பற்றிய கோரிக்கையை எழுப்பியவர்கள் கண்டிச் சிங்களவர்களே! அவர்கள் இன்று மௌனிகளாக இருப்பது ஆச்சரியமாகவுள்ளது. 1833ல் இலங்கை ஒன்றாக்கப்பட்டது. அன்று வரை மூன்று அரசுகள்- கண்டி அரசு, யாழ்ப்பாண அரசு, கோட்டை அரசு என்பன - தெளிவான எல்லைகளாற் பிரித்து ஆளப்பட்டு வந்தன. நிருவாக காரணங்களுக்காகவே அவை இணைக்கப்பட்டன. பீஜித் தீவு, இலங்கைத் தீவுகளில் நடைபெறும் குழப்பங்கள் குளறுபடிகளுக்குக் காரணர்கள் அந்நிலையை உருவாக்கிய ஆங்கிலேயர்களே. ஆகவே இந்நாடுகளில் அமைதியை ஏற்படுத்தும் பொறுப்பும் அவர்களுடையது என்பதை அவர்கள் தட்டிக்கழித்தல் நியாயமான ஒன்றல்ல.

பாராளுமன்ற முறையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் விட்டமை, சாத்வீகப் போராட்டங்கள் தோற்றமை, ஒப்பந்தங்களைச் சிங்கள அரசியல்வாதிகள் மதிக்கத் தவறியமை, ஆயுதபடையினரின் அத்துமீறிய அரக்கத்தனமான சித்திரவதைகள் போன்றவையே தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்தவையாகும். பௌத்தத்தோடும் கத்தோலிக்கத்தோடும் தொடர்புடைய ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன் நான். பௌத்த தர்மத்தை மறந்து குறுகிய இனவாதத்துக்காகப் போராடும் இலங்கைப் பௌத்தத்தையும் முதலில் சிங்களவராகத் தம்மை எடுத்துப் பின்னரே கிறிஸ்தவர்களாகத் தம்மை மதிக்கும் இலங்கைக் கத்தோலிக்க மறையையும் பற்றி நான் வெட்கப்படுகின்றேன். கிறிஸ்தவ விழுமியங்களை முதன்மைப்படுத்தத் தவறிய கிறிஸ்தவ மறையில் நின்று விலகினால் என்ன என்றுகூட நான் எண்ணிய துண்டு. எனது மனைவியும் ஒரு தமிழ்ப் பெண்ணே! அனைத்து தமிழர்களும் தீவிரவாதிகள் என்பதனை என்னால் ஏற்க முடியாது. ஒன்றாக வாழ முடியாத நிலையில் மலேசியாவும் சிங்கப்பூரும் பிரிந்தன. இரண்டு நாடுகளும் வளர்ச்சியும் சிறப்பும் கண்டு வாழ்கின்றன. அதனை இலங்கையர்களும் கவனத்தில் எடுக்க வேண்டும். ஒன்றாக இருந்து சீரழிவதிலும் பார்க்க இரண்டாகப் பிரிந்து செல்லல் சிறப்புத்தரும். பின்னர் இரண்டு நாடுகளும் இணைப்பு ஒன்றை ஏற்படுத்தி உறவுகளை வளர்க்கலாம்.

தமிழர்களும் சிங்களவர்களும் இந்தியாவிலிருந்து 2500 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை வந்தவர்ககள். விஜயனும் அவன் நண்பர்களும் சில ஆண்டுகள் முன்பாக வந்திருந்தால் அது வரலாற்றில் பாரதூரமான விடயமல்ல. நான் அவுஸ்திரேலியா வந்த ஒரு மாதத்தில் அதன் கல்வி அமைப்புப் பற்றி விமர்சன அறிக்கை தயாரிக்கக் கோரப்பட்டபோது நான் புதியவன் என்று தயங்கிய வேளை "நீங்களும் அவுஸ்திரேலியன்தான் தயங்காது எழுதுங்கள்" என்று பணிக்கப்பட்டேன். ஒரு மாதத்திலேயே நான் அவுஸ்திரேலியனாக மதிக்கப்பட்டால் 2500 ஆண்டுகள் வாழும் ஒரு இனம் அந்நாட்டில் உரிமை கோருவது நியாயமல்லவா?

உலக வரலாற்றில் இன விடுதலைப் போர்கள் எங்கும் தோற்றதில்லை "என்றா" விடுதலைப் போராளிகள் ஸ்பானியாவில் இன்றும் போராடுகிறார்கள். இலங்கையிலும் விடுதலைப்போர் வென்றே தீரும். சாதாரண சிங்கள மக்கள் தம் பிள்ளைகள் போர்க்களத்தில் இருக்கிறார்களே என்றுதான் அரசின் போர்த் திட்டத்தினை ஆதரிக்கின்றார்கள். ஆனால் அவர்களில் பலர் உயிரோடு இல்லை **என்பது** அவர்களுக்குத் தெரியாது.

எனது மனதை மிகவும் கவர்ந்த, அழகும் சிறப்பும் வாய்ந்த மணலாற்றுப் பிரதேசத்தை அழித்து பலரைக் கொன்று குவித்து வெலிஓயா எனப் பெயர் மாற்றியமை, குண்டுகளைப் பொழிந்து பல அப்பாவித் தமிழர்களைக் கொன்றமை, மனித உரிமை மீறல்களை உச்சக்கட்டத்தில் கொண்டு சென்றமை, தமிழரின் தாயகமான யாழ்ப்பாணத்தை அழித்துச் சிதைத்தமை போன்றவற்றை தலைமைதாங்கி செயற்படுத்திய ஓய்வு பெற்ற இலங்கை இராணுவத் தளபதி ஜானக பேரேராவை இலங்கையின துதுவராக அங்கீகரித்ததன் மூலம் உலகுக்கு என்ன செய்தியை சொல்ல விரும்புகிறீர்கள் என நான் அவுஸ்திரேலியாவின் வெளிநாட்டு அமைச்சரிடம் கேள்வி எழுப்பியுள்ளேன்.

சித்திரவதைகள், மனித உரிமை மீறல்களில் சர்வதேச மன்னிப்புச் சபையின் கணிப்பின்படி இலங்கை முதன்மை வகிக்கும் நாடுகளில் ஒன்றாக உள்ளது. நோர்வேயின் தூதுக் குழுவைத் தொடர்புகொண்டு சிலபல இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களைத் தெளிவுபடுத்த விரும்பினேன். எனது பணிகளை மதிக்கும் அவர்கள் என்னைத் தொடர்பு கொள்ள இலங்கை அரசு அனுமதி கொடுக்கவில்லையென வருத்தத்தோடு மறுத்துவிட்டனர். இப்படியான அரசால் இனப்பிரச்சினை தீர்வு பெறும் என நம்ப முடியாது.

சிங்களவர்கள் சுயநிர்ணய உரிமை கொண்டு வாழ்வது போன்று தமிழரும் தங்கள் வாழ்வினை, எதிர்காலத்தினை, நிர்ணயிக்கும் முழு இறையாதிக்கம் **உள்ளவர்கள்.**

இலங்கையில் நடைமுறையில் உள்ளது பெரும்பான்மைச் சமூகம் ஒன்றின் எதேச்சாதிகார ஆட்சியே. இன, மொழி, மத வேறுபாடுகளால் பிரிக்கப்படாத நிலையில் ஒரே தன்மையான மக்கள் கூட்டத்தை பெரும்பான்மையினர் ஆளும்பொழுதே சனநாயகம் அர்த்தமுள்ள மக்களாட்சியாக மலர்கிறது!

(நன்றி - தொடுவானம்)




நன்றி – தினகுரல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் நினைவுகள்

## இளம் மங்கையரே! சிலுவை வழியை பின் பற்ற ஓர் அழைப்பு

"காலத்தின் தேவையே இறைவனின் சித்தம்" என்பதை அறிந்து ஏற்றுக் கொண்டார் அருட்தந்தை தியோடோசியஸ். 1884ம் ஆண்டு இறைசித்தத்திற்கு வடிவம் கொடுக்க இவரே எமது சபைக்கு வித்திட்டார். பேர்ணாடா அன்னையைத் தலைவியாகக் கொண்ட மூவர் குழுமம் சுவிற்சலாந்திலுள்ள மென்சின்கன் என்ற கிராமத்தில் புரட்சியில் பூத்த பூக்களாக இறைவனுக்கு தம்மை முழுவதும் அற்பணமாக்கினார்கள். அன்றைய சமூக தேவைகளான கல்வி, சமூகசீர்திருத்தம், மருத்துவம் ஆகியவற்றில் தம்மை ஈடுபடுத்தினார்கள். மக்களின் ஆன்மீக தாகம் நீக்க பல பணிகளை இவர்கள் முன்னெடுத்தனர்.

"சிலுவையில் இரட்சணியம்" என்பதை எமது விருது வாக்காகக் கொண்டுள்ளோம். இயேசுவின் மன்னிக்கும் அன்பை அனுபவத்தின் மூலமாக உணருகின்றோம். அவரது எல்லையற்ற அன்பில் வளர்வதினால் அவரது சாயலை எம்மில் பெறுகிறோம். சிலுவையில் இயேசு படிப்பித்த தாழ்ச்சி மூலமாக அன்பில் முழுமையடைவதை எமது தனிவரமாகக் கொண்டுள்ளோம். எமது பணி இன்று உலகில் நான்கு கண்டங்களில் நடைபெறுகிறது. இறை மனித சேவையை வெவ்வேறு வடிவங்களில் திருச்சபைக்கு வழங்கி வருகின்றோம். இலங்கைத் திருச்சபையின் தேவைகளை மனத்திற் கொண்ட அன்றைய யாழ் ஆயர் ஜெ. எ. கியோமர் ஆண்டகையின் வேண்டுகோளின்படி இந்தியாவிலிருந்து எமது சபையின் இந்திய ஐரோப்பிய கன்னியர்கள் 1930ம் ஆண்டு யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் பணிபுரிய அழைக்கப்பட்டனர். முகமலர்ச்சியும் பெருந்தன்மையும் கருணையுள்ளமும் கொண்ட பணியாளர்களாக புனித பிரான்சிஸ் அசிசியின் தாழ்மையுள்ள புதல்விகளாக தம்மையே அப்பணித்த எம் சகோதரிகளைத் தொடர்ந்து இன்று இலங்கை மண்ணில் எல்லாமாக ஆறு மறைமாவட்டங்களில் எமது சபையின் பணிகள் கருவறை தொடங்கி கல்லறை வரைக்கும் தேவைக்கேற்ற விதத்தில் முழு மனித வளர்ச்சியை மனதிற் கொண்டு பகிரப்படுகின்றது. பாதிக்கப்பட்டு அல்லலுறும் எத்தனையோ உள்ளங்கள் மத்தியில் எமது சபையின் ஸ்தாபர்களால் முன்வைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட எமது சபையின் நோக்கம் அன்று மட்டுமல்ல இன்றும் தொடரப்படுகிறது.

இளம் மங்கையரே!

இதோ உங்களுக்கு ஓர் சவால்! அண்ணல் இயேசுவின் அரசில் உழைக்க, விண்ணவன் வார்த்தைகளை மண்ணில் பரப்ப, சிறு குழந்தைகளின் அன்புத்தாயாக, இளம் மங்கையரின் இல்லத் தலைவியாக, மாணவ மணிகளின் நல்லாசானாக, நோயாளிகளுக்கு வாழ்வு கொடுக்கும் தியாகத் தாதியாக, வயோதிபரை அரவணைத்து அவர்களின் இறுதிப் பயணத்தில் கைகொடுக்கும் கருணை உள்ளமாக, இன்னும் எல்லோருக்கும் எல்லாமாகத் திகழ உங்கள் வாழ் நாட்களை அர்ப்பணிக்க விரும்புகின்றீர்களா? மீட்பளிக்க வந்த இறைமகன் கிறிஸ்து தம் மீட்புப் பணியில் உங்களுக்கும் பங்கு தர உங்களை அழைக்கிறார்.

விபரம் அறிய விரும்புவோர் தொடர்பு கொள்க

அருட் சகோதரி ரஞ்சினி
தேவ அழைத்தல் வழிகாட்டி
திருச்சிலுவை கன்னியர் மடம்
29, நொறிஸ் அவனியு
கொழும்பு - 08

SR. RANGINI
HOLY CROSS CONVENT
29, NORRIS AVENUE
COLOMBO – 08

### 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 30 ✷ 10 ✷ 1982

விண்ணில் 02 ✷ 09 ✷ 1994

செல்வி மதியாபரணம்
சுனேத்திரா
எழுத்தூர், மன்னார்

விதி என்னும் பாதகன் விபத்தில்
பறித்து விட்டானே நின்னுயிரை
தாங்க முடியவில்லையம்மா
ஏழு ஆண்டுகளென்ன?
எழுநூறு ஆண்டுகளானாலும்
உன் நினைவை
மறக்க முடியாதம்மா!
எத்தனை குறும்புகள் காட்டி எம்மை
அடிபணிய வைப்பாய் ஆனால்
மரணத்துக்கு மட்டும் நீ
மண்டியிட்டாயோ?
என்றும் மறதி என்பது
உன் நினைவில் இல்லை.

என்றும் உன் பிரிவால் பரிதவிக்கும்

அப்பா, அம்மா, தம்பிமார், தங்கை,
உற்றார், உறவினர்கள்

### 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்விகள்.

அ. இம்மாகுலேற்றா (செல்வராணி பர்ணாந்து) மண்ணில் 30.03.1974
அ. தெரசிற்றா அருள்மணி (யமா கூஞ்சு) மண்ணில் 01.10.1974

அஸ்தமனம் 29. 09. 98

துள்ளித்திரியும் பருவத்திலே பருவ மங்கையராய்
பறந்து திரிந்த சிட்டுக்களே!
பாலப்பருவம் முதல் பல்கலைக்கழகம் வரை
ஒன்றாய் கூடித் திரிந்தீரே!
விடுமுறையில் வீடு திரும்பிய நீங்கள்,
இன்னும் வீடு வந்து சேராததன் மாயமென்ன?
காலன் அவன் உங்களுயிரை பாதி வழியில்
பறித்து விட்டான்,
பதைக்குதம்மா எம் நெஞ்சங்கள்
உம் ஆன்மா சாந்தி பெற
இறையவனை வேண்டுகிறோம்.

இவர்களின் பிரிவால் வாடும்
பெற்றார், உற்றார், உறவினர்கள்,
வங்காலை, மன்னார்.

### 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 24 • 08 • 1903

விண்ணில் 28 • 09 • 1981

திரு.வஸ்தியாம்பிள்ளை
யோவான்பிள்ளை
(ஆயுள்வேத வைத்தியர்)
முத்தரிப்புத்துறை

இம் மானிலத்தில் நல் மாணிக்கமாய்!
நித்திலத்தில் முத்தகம் என்ற முத்தாய்
அன்போடு அறிவையும் எமக்கு
விதைத்திட்ட வித்தாய்
ஆயுள்வேத சித்தி பெற்ற வித்தகனாய்
பரிவுடனே உயிர்களெல்லாம்
பரிகரித்த வைத்தியனாய்
ஊரவரின் உண்மையுள்ள உத்தமனாய்
இறைவனிலே பிரியமுள்ள பக்தனாய்
வாழ்ந்திட்ட எம் அன்புத் தந்தாய்
ஆண்டுகள் (20) இருபது ஓடி
மறைந்திடினும் ஆறவில்லை உன் எண்ணம்
மாறவில்லை உம் வார்த்தைகள்
உம் தூய உள்ளம் நாமும் பெற்றிட
நாடுகின்றோம் எம் நாதனிடம்
சாந்தி சாந்தி சாந்தி

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்.
இலங்கை- மக்கள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்
சுவிஸ்- மக்கள், மருமகள் பூட்டப்பிள்ளை
கனடா- பேரப்பிள்ளை பூட்டப்பிள்ளை
நோர்வே - பேரப்பிள்ளை பூட்டப்பிள்ளை
ஜேர்மனி -பேரப்பிள்ளை பூட்டப்பிள்ளை

## அமெரிக்க விமான ஓட்டி

......ம் பக்கத் தொடர்ச்சி

உதாரணமாக பாஸ்குக் காலங்களில் "அவர் உயிர்த்து விட்டார்" என்ற செய்தியை பெரிய எழுத்துக்களில் எழுதி மக்களைப் பரவசப்படுத்துவார். அவரின் கூற்றுப்படி பெரியவர்களிலும் பார்க்க பிள்ளைகளை இவ்வார்த்தைகளை மிகவும் கவருவததாகக் கூறுகிறார். இவரது ஊர்வாசி திரு லொறென்ஸ் மக்லாறன் இது பற்றிக் கூறுகையில் எனது 5 வயது மகன் இந்த விமானம் பறக்கும் நாட்களில் விசேடமாக வார இறுதியில் வீட்டின் வெளியில் வந்து இந்த வாசகங்களைக் கண்டபின் கடவுள் பற்றிய கேள்விகளை எம்மிடம் கேட்பான் என்றார். இவரின் இச் செயலினால் மகிழ்வுற்ற பங்குக் குருவானவர் ஆலயத்தில் இடம் பெற்ற பங்கு விழாவில் "இவ்வாண்டின் சிறந்த பங்கு மகன்" என்ற கௌரவப் பட்டமளித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

## அருட்சகோதரி எம்மா ....

1ம் பக்கத் தொடர்ச்சி

வங்காலையில் தனது ஆரம்பக்கல்வியைத் தொடங்கிய இவர் இளவாலை தி.கு.க மடத்தில் தனது கல்வியைத் தொடர்ந்து கற்று இறைசேவைக்குத் தன்னை அர்ப்பணிக்க ஆவல் கொண்டு நவத்துறவு வாழ்வை மேற்கொண்டார். தனது 24வது வயதில் தனது முதல் அர்ப்பணத்தை இறைவனுக்களித்தார். தலைவிகளின் பணிப்பின் பேரில் ஆசிரியப்பணியை மேற்கொள்ள விருப்புத் தெரிவித்து கொழும்புத்துறை ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றார். தொடர்ந்து ஊர்காவற்துறை, கரம்பன், வவுனியா, நெடுந்தீவு, உருத்திரபுரம், பாசையூர், இளவாலை, பேசாலை, தலைமன்னார் போன்ற இடங்களில் கல்விப்பணி, சமூகப்பணி, பங்குப்பணி, ஆலயப்பணி, பாலர்கல்வி முதலான பணிகளில் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் ஈடுபட்டார். இதுமட்டுமல்ல தான் பணியாற்றிய இடங்களிலெல்லாம் ஏழைகளின் குடிசைகளிலும், கொட்டில்களிலும் புகுந்து அவர்களோடு உறவாடி, உரையாடி, அவர்களது துன்பம், கவலைகட்குச் செவிமடுத்து, ஆறுதல் மொழி பகர்ந்து ஆவன செய்ததை எவரும் எளிதில் மறந்து விடப்போவதில்லை. மறுநாள் நடந்த அடக்கச் சடங்கில் ஆயர், குருக்கள், அருட்சகோதரர்கள் அரட்சகோதரிகள், பொதுநிலையினர், உற்றார், உறவினர் என்று பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். இவரது ஆன்மா நித்திய சாந்தி பெறத் தொடர்ந்து செபிப்போம்.

## நீத்தார் நினைவுகள

**நீத்தார் நினைவுகள் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளும் இடம்பெற வேண்டும் என விரும்புகின்றீர்களா?**

அப்படியாயின் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். எந்த மாதத்தில் இந் நினைவுகள் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முன்னைய மாதத்தில் எமக்கு கிடைக்கக்கூடியவாறு நினைவுக்குக் குறிப்பு, புகைப்படப் பிரதி என்பவற்றுடன் கட்டணமாக ரூபா 500 ஆகியவற்றை அனுப்பி வையுங்கள். திருமறைப்பணி நிலையத்தில் பணி புரியும் அருட்சகோதரி லோறன்சியா அவர்களிடம் அலுவலக நேரத்தில் நேரடியாகவும் கையளிக்கலாம். புகைப்படப் பிரதிகளை உங்களுக்கு திருப்பி அனுப்பிவைப்போம்.

# மன்னா பணியகச் செய்திகள்




## வெளிநாட்டிற்கு மன்னா

வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர் நண்பர்கள் மன்னாவைப பெற வேண்டும் என விரும்புகிறீர்களா? அப்படியாயின் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக ரூபா 500 உடன் எமது பணியகத்தில் ஒப்படைக்கவும் . உங்கள் உறவினரின் வீடு தேடி மன்னா பறந்து செல்லும். இது வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர் நண்பர்களுக்கு நீங்கள் வழங்கக் கூடிய சிறந்த பரிசாக அமையுமல்லவா?

## விளம்பரங்கள்

மன்னா பத்திரிகையில் கத்தோலிக்க நிறுவனங்களின் விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ஆலய யூபிலிகள் மற்றும் விசேட நிகழ்ச்சிகளை ஒட்டி மன்னாவில் சிறப்பிதழ்களை வெளியிடுவதாக இருந்தால் அதற்குரிய நியாயமான கட்டணம் அறவிடப்படும். மேலதிக விபரங்களுக்கு நேரடியாகவோ கடிதம் மூலமாகவோ பதிப்பாசியரோடு தொடர்பு கொள்ளவும்.



## வெளி நாட்டில் உள்ளவர்கள் மன்னா சந்தாப்பணம் அனுப்புவதாயின்

தபால் செலவு உட்பட ஒரு ஆண்டுக்கான மன்னா சந்தாப்பணமாக இலங்கை ரூபாய் 500 அனுப்புமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். விரும்பியவர்கள் அன்பளிப்பாக மேலதிக தொகையையும் அனுப்பலாம். காசோலை மூலம் அனுப்புவதாயின்
HATTON NATIONAL BANK LIMITED - MANNAR, THE EDITOR, S/A. No.11780
என்ற பெயருக்கு காசோலையை வரைந்து எமது முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பதிப்பாசிரியர்

## உங்கள் தொடர்புகளுக்கு

கீழே உள்ள இரண்டு முகவரிகளுள் ஏதாவது ஒன்றுடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்

| அலுவலக முகவரி | வதிவிட முகவரி |
|---|---|
| பதிப்பாசிரியர்<br>"மன்னா"<br>திருமறைப் பணி நிலையம்<br>புனித செபஸ்தியார் வீதி<br>மன்னார் | பதிப்பாசிரியர்<br>"மன்னா"<br>பங்குப் பணிமனை<br>புனித லோறன்சியார் ஆலயம்<br>தலைமன்னார் |
| **OFFICE ADDRESS** | **RESIDENTIAL ADDRESS** |
| The Editor<br>" MANNA "<br>Pastoral Centre<br>St. Sebastian's Street<br>Mannar. | The Editor<br>" MANNA "<br>Parish House<br>St. Lawrence Church<br>Talaimannar |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை விவகாரத்தில்

## இந்தியா பார்வையாளராக இருக்கக்கூடாது

### தமிழ்நாட்டு ஆயர் பேரவையில் யாழ் ஆயர்



இவ்வாண்டு யூலை 24 ஆம் திகதி அன்று மதுரையில் நடைபெற்ற தமிழ்நாட்டு ஆயர் பேரவையில் கலந்து கொண்ட யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் இந்தியா இனியும் பார்வையாளராக இருக்காமல் பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வைக்காண அரசையும் புலிகளையும் பேச தூண்ட வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

இரு பேராயர்களையும் 16 ஆயர்களையும் கொண்ட மேற்படி தமிழ் நாட்டு ஆயர் பேரவையில் யாழ்ப்பாண ஆயர் ஒருவர் உரையாற்றியது இதுவே முதல் தடவையாகும். மதுரை, கோட்டார், திருச்சி, ஊட்டி, தூத்துக்குடி, சென்னை ஆயர்களோடு தொடர்பு கொண்டுள்ள யாழ். ஆயர் மேற்படி பேரவையின் தலைவர் சென்னை-மயிலை பேராயர் ஜேம்ஸ் அருள் தாஸ் அவர்களின் அழைப்பின்பேரில் 30 நிமிடங்கள் உரையாற்றினார்.

தமதுரையில் மேற்படி வேண்டுகோளை விடுத்ததோடு 1லட்சத்து 10 ஆயிரம் இலங்கைத் தமிழ் மக்களில் 70 ஆயிரம் மக்கள் 125 அகதி முகாம்களில் பராமரிக்கப்படுகிறார்கள் என்று கூறி அப்பணிக்கு நன்றி தெரிவித்தார்.

## ஜனாதிபதியை ஆயர்கள் சந்திப்பு

### சமாதானத் தீர்வுக்கு ஜே.வி.பி.தடை விதிக்கவில்லை என ஜனாதிபதி ஆயர்களிடம் தெரிவிப்பு

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவை ஆயர்கள் மற்றும் மதகுருமார்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற இந்த சந்திப்பில் இரத்தினபுரி ஆயர் அதிவண. மல்கம் ரஞ்சித், மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு யோசப் மற்றும் பௌத்த மதகுருமார்கள் பங்கேற்றதாக ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாகவே இந்தச் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சமாதான முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குத் தனக்கு எத்தகைய தடைகளையும் ஜே.வி.பி விதிக்கவில்லையென்றும் அந்த முயற்சியைத் தொடருவதற்கு தாம் திடசங்கற்பம் பண்டுள்ளதாகவும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பதில் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய அரசியல் சூழ்நிலை, சமாதான முயற்சி, புலிகளுடனான பேச்சுவார்த்தை தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

## அருட்சகோதரி ஹோட்டன்ஸ் தி. கு. இறைவனடி சேர்ந்தார்

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரி ஹோட்டன்ஸ் 24.08.2001ல் தனது 80 வது வயதில் இறைபதமடைந்தார். அறிவுக்களஞ்சியம் என அனைத்து உயர்வகுப்பு மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் போற்றப்பட்ட இவர் இளவாலை, நாரந்தனை, குருநகர், போன்ற இடங்களில் கல்விப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். ஆரம்பகாலம் தொட்டே நோயாளி எனும் பட்டத்தைத் தாங்கியிருந்த பொழுதிலும் இந்த நோய் இவரது பணியார்வத்திற்கு ஒரு தடையாக அமையவில்லை. கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் இளவாலை தி.கு.க இல்லத்தின் அனாதைச் சிறாருக்கு அன்னையாகவும் நல் ஆசானாகவும் திகழ்ந்து அவர்களுக்கு அன்பையும், அறிவையும் ஒருங்கே ஊட்டினார். தனது பணியை நிறைவாகச் செய்து இறைபாதம் சரணடைந்த இவரது ஆன்மா என்றும் அவரில் அமைதி பெற வேண்டுவோம்.

## கார்மேல் குடும்பம் உத்தரியத்தை பெற்றுக்கொண்ட 750 ஆவது ஆண்டு

திருச்சபையின் வரலாற்றிலே புனித மலர்கள் மலர்ந்த பூங்காவாகவும், செப தவ தியான வாழ்வில் சுரங்கமாகவும் திகழ்வது கார்மேல் சபை. அன்று புனித கார்மேல் மலைமீது இறைவாக்கினர் எலியாஸ், இஸ்ராயேல் மக்களுக்கும் பாவால் என்ற பொய்த் தெய்வத்தின் இறைவாக்கினர் முன்பாகவும் உண்மைத் தெய்வம் யாவே என்பதை மெய்ப்பித்தார். (1அர.18:39). ஆழ்ந்த செப, தவ, தியானத்தின்பின் மீண்டும் அம்மலை மீது மேகத்திரளின் மத்தியில் மரியாளின் திருவுருவைக் கண்டார். இக்காட்சியின் மாட்சிமையை உணர்ந்த தபோதனர் சிலர் அம்மலைமீது மரியாளின் நினைவாக ஒரு சிற்றாலயத்தை நிறுவினர். அன்றிலிருந்து தியான வாழ்வின் திருக்கூட்டம் உதயமானது. 1251 ஆடித் திங்கள் புனிதர் சைமன் ஸ்டொக் என்பவர் தலைவராகவிருந்தவேளை அன்னை மரியாள் அவருக்குத் தரிசனமாகி கார்மேல் உத்தரியத்தைக் கையளித்து தன் அன்பையும் பாதுகாவலையும் உறுதி செய்தார். கார்மேல் அன்னையின் அரவணைப்பில் சபையின் வளர்ச்சி துரிதமாகி பாரெங்கும் பரவலாயிற்று. இச்சபையிலே தம்மை அர்ப்பணித்து மலர்ந்த புனிதர்களான அவிலா தெரேசாள், சிலுவை அருளப்பர், சின்னத் தெரேசாள் போன்றோர் உலகம் போற்றும் நறுமணப் பொன் மலர்களாக விளங்குகின்றார்கள்.

## எப்போது இலங்கைக்கு வருவோம்?


### யாழ் ஆயரிடம் ஈழத்தமிழ் அகதிகள் ஆதங்கம்

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமது இந்திய விஜயத்தின்போது யேசு சபைக் குருக்களின் J.R.S எனப்படும் அகதிகளுக்கு உதவும் அமைப்பின் உதவியுடன் திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலுள்ள 5 அகதி முகாம்களை தரிசித்தார்.

திருச்சியிலுள்ள முகாமில் ஞாயிறு திருப்பலி நிறைவேற்றி அவர்களோடு உரையாடினார். குருநகர், வல்வெட்டித்துறை, மன்னார், தலைமன்னார், நானாட்டான், வங்காலை, பேசாலை ஆகிய ஊர்களைச் சார்ந்த கத்தோலிக்க மக்கள் ஆயரோடு உரையாடினர். தம்மோடு உரையாடிய மக்கள் "நாம் எப்போது இலங்கைக்கு வருவோம்" என்ற கேள்வியையே திரும்பத் திரும்பக் கேட்டதாக யாழ் ஆயர் தெரிவித்தார்.

## இறைவனைப்பற்றிய நினைவை ஊட்ட

## அமெரிக்க விமான ஓட்டி புதிய யுத்தி



ஜெறி ஸ்ரீவன்ஸ் (Jerry Stevens) என்னும் அமெரிக்கர், பாம் பீச் (Balm Beach) மறைமாவட்டத்தின் போக்கா ராட்டோன் (Boca Raton) என்னும் ஊரில் புனித யூதா பங்கைச் சார்ந்தவர். இவர் ஓய்வு பெற்ற விமான ஓட்டி. அமெரிக்க மக்கள் எப்பொழுதும் இறைவனை மறக்காது இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு புதிய யுக்தியைப் பயன்படுத்தினார். தன்னிடமுள்ள சிறிய விமானத்தில் பறக்கும்போது இறைவனைப் பற்றிய வார்த்தைகளை எழுதி விமானத்தின் பின்புறத்தில் பறக்கும்படி செய்து அவ்வூர் மக்களுக்கு இறைவனைப்பற்றிய நினைவுகளை ஊட்டி வருகின்றார். இவர் தம் ஓய்வு நேரத்தில் கிழமைக்கு 3 அல்லது 4 தடவைகள் இவ்வாறு பறந்து மக்களுக்கு இறைவனைப் பற்றிய நினைவூட்டுதலைச் செய்கிறார். வானத்தில் காணப்படும் வாக்கியங்களாக "இறைவன் உன்னை அன்பு செய்கிறார்" "இயேசு உன்னை அன்பு செய்கிறார்" என்றும், பாஸ்கு வாரங்களிலும் கிறிஸ்து பிறப்பு வாரங்களிலும் செய்திகளை மாற்றுவதால் மக்கள் இவ்வாசகங்களை மிகவும் விரும்பி வாசிக்கின்றார்கள்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

## இந்தோனேசியாவில் மறை இல்லங்கள் அழிப்பு

இந்தோனேசியாவில் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் கத்தோலிக்க தியான இல்லமொன்றும் சிறிய ஆலயமும் சகோதரிகள் இல்லம் ஒன்றும் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டது. இது கிழக்கு இந்தோனேசியாவிலுள்ள மலோக்கு மாகாணத்தின் தலைநகரான இம்போனில் நடந்தது. 12.06.2001 தாக்குதல் நடந்த மறுநாள் புனித யுத்தம் (ஜிகாத்) நடத்தும் இஸ்லாமிய தீவிரவாதிகளின் இல்லங்கள் பாதுகாப்பு படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டன. அதன் விளைவாக இஸ்லாமிய தீவிரவாதிகள் 22 பேர் கொல்லப்பட்டும் 34 பேர் காயப்பட்டும் 8 பேர் காணாமற்போயும் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. புனித யுத்தம் நடத்துவதாகக் கூறும் தீவிரவாதிகள் "கொன்சாலோ வெலோசோ" எனும் தியான இல்லத்ததைச் சூழ்ந்து கொண்டு அதன் அருகிலுள்ள பாதுகாப்பு அரணில் குண்டை வெடிக்க வைத்தார்கள். சத்தம் கேட்டு காவல் துறை தலத்திற்கு விரையவே இருபகுதியினருக்குமிடையே சண்டை மூண்டது. இதன்போது இஸ்லாமியத் தீவிரவாதிகள் சிறிய ஆலயத்தை எரித்தும் அருட்சகோதரிகளின் இல்லத்தை உடைத்தும் பின் தீயிட்டும் கொளுத்தினர். பங்குக் குரவருடைய பணிமனையும் இம்மோதலில் அழிக்கப்பட்டது. இம் மோதலில் 3 கிறிஸ்தவர்கள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். இதற்கு முன்னர் இஸ்லாமிய தீவிரவாதிகள் இந்தோனேசிய [illegible] நடுநிலையொன்றைத் தாக்கி அதில் 3 உறுப்பினர்களைக் கொன்றனர்.

## அகதிகள் மீது அக்கறை காட்டுக!

### திருத்தந்தை அழைப்பு

உலகிலுள்ள ஏழை நாடுகளிடமிருந்து புகலிடம் தேடியிருக்கும் சுமார் ஐந்து கோடி அகதிகள்மீது அக்கறை காட்டப்பட வேண்டுமென திருத்தந்தை உலக சமூகத்திற்கு அழைப்பு விடுத்தார். அகதிளை பாதுகாப்பதற்கான ஜெனீவா ஒப்பந்தத்தை மதிக்குமாறும் அழைப்பு விடுத்தார். அகதிகள் பற்றிய விழிப்புணர்வைத் தூண்டுவதற்கென அஸ்ராலே எனும் இத்தாலிய யேசு சபை மையம் ஆடி மாதம் 15 தொடக்கம் 30 வரை நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

## திரைப்படங்கள் மற்றும் வானொலி, தொலைக்காட்சிக்கான கத்தோலிக்க நிறுவனங்கள் ஒரே அமைப்பாக இணைகின்றன

கடந்த 60 ஆண்டுகளாக தனித்தனி அமைப்புக்களாகச் செயற்பட்டு வந்த ORCI என்னும் திரைப்படங்களுக்கான கத்தோலிக்க நிறுவனமும் UNDA எனப்படும் வானொலி, தொலைக்காட்சிக்கான கத்தோலிக்க நிறுவனமும் 2001 நவம்பரில் ரோமாபுரியில் நடக்கப்போகும் உலக மகாநாட்டில் ஒன்றிணைவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

தகவல் தொழில் நுட்ப முன்னேற்றத்தினால் தொடர்பு சாதனங்களை வெவ்வேறாக வரையறை செய்வது இயலாதிருப்பதனால் பல வருடங்களாக இவை ஒன்றிணைவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வந்தது.

இவை ஒன்றிணைந்த பின் இவற்றுக்குப் பதிலாக சமூகத் தொடர்புகளுக்கான உலக கத்தோலிக்க சங்கம் என்னும் புதிய அமைப்பு உருவாகும். இது SIGNIS என அழைக்கப்படும். எல்லாத் தொடர்பு சாதனத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும் இதில் அங்கத்துவம் பெற சந்தர்ப்பமுண்டு.

எல்லா நாடுளிலும் SIGNIS இன் தேசிய அமைப்புகளை நிறுவுமாறு இவ்வமைப்பின் இலங்கைத் தேசிய இயக்குனர் கேட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org